# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, FEBRUARY 21, 2023

செவ்வாய்க்கிழமை பெப்ரவரி 21, 2023 | ஒளி: 08 கதிர்: 213 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE




## அரசாங்க அச்சகத்துக்கு பலத்த பாதுகாப்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்ப்பு பேரணி இடம்பெற்ற காரணத்தால், அரசாங்க அச்சகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளதாக அரசாங்க அச்சக அதிகாரி கங்கானி கல்பனா லியனகே, திங்கட்கிழமை (20) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



தேர்தல் விவகாரத்தில்

## ஜனாதிபதி தலையிட முடியாது

தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் விவகாரங்களில் ஜனாதிபதியோ அல்லது வேறு எந்த நபரோ தலையிட முடியாது என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான சாகர காரியவசம், திங்கட்கிழமை (20) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

திட்டமிட்ட திகதியில் தேர்தலை

# நடத்த முடியாது

### உயர்நீதிமன்றிடம் அறிவித்தது தேர்தல் ஆணைக்குழு



எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி திட்டமிட்டபடி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியாது என்று தேசிய தேர்தல் ஆணைக்குழு உயர்நீதிமன்றத்துக்கு நகர்த்தல் பத்திரம் ஊடாக திங்கட்கிழமை (20) அறிவித்தது.

மேற்குறிப்பிட்ட திகதியில் தேர்தலை நடத்துவதாக ஜனவரி 18 மற்றும் பெப்ரவரி 10 ஆம் திகதிகளில் உயர்நீதிமன்றத்துக்கு வாக்குறுதி அளித்த போதும் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணிகளால் தேர்தலை நடத்த முடியாதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

சின்னத் தேர்தல் ரிட் மனு;

## நகர்த்தல் பத்திரம் வாபஸ்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானத்தை இரத்து செய்யக்கோரி, உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ரிட் மனுவை முன்கூட்டி பரிசீலிப்பதற்காக தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் பத்திரத்தை வாபஸ் பெற்றுக்கொள்வதாக உயர்நீதிமன்றத்திடம் திங்கட்கிழமை (20) அறிவிக்கப்பட்டது.

மனுதாரரான ஓய்வுபெற்ற இராணுவ கேர்ணல் டபிள்யூ.எம்.ஆர் விஜேசுந்தரவின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பைசல் முஸ்தபா, எதிர்வரும் 22ஆம் திகதி தபால் மூல வாக்கெடுப்பு நடத்த திட்டமிட்டிருந்த நிலையில், தமது மனு 23ஆம் திகதி பரிசீலிக்கப்படும் என்று கடந்த 10ஆம் திகதி அறிவிக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



யாத்திரை சென்று திரும்பிய

## பஸ் பள்ளத்தில் பாய்ந்ததில் 3 பேர் பலி; 26 பேர் படுகாயம்

மலையக நிருபர்கள்

சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்ற குழுவினரை, மஹரகம நோக்கி ஏற்றிச் சென்ற தனியார் பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 100 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்தனர்.

தொடர்ச்சி P2




## ஆறு ஆண்டுகள் நிறைவு

காணாமல் ஆக்கப்பட்டவர்களால் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்படும் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஆறு ஆண்டுகள் நேற்றுடன் (20) நிறைவுபெற்றன. அதனை நினைவுகூர்ந்து, நேற்று கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி, கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டமானது நேற்றுடன் ஏழாவது ஆண்டில் கால் பதித்தது.

(யது பாஸ்கரன்)



## சீனா தாமதிப்பதே தடையாக உள்ளது



இலங்கையின் கடனை மறுசீரமைப்பதில் சீனாவின் சாதகமான பதிலில் ஏற்பட்ட தாமதமே, சர்வதேச நாணய நிதியத்தின் (ஐஎம்எப்) பிணையெடுப்புக்கு தற்போது தடையாக உள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## தடை உத்தரவை மீறியும் ஐ.ம.ச போராட்டம்

### கடும் மழையால் பாதிப்பு என்கிறார் மத்தும பண்டார

நீதிமன்றம் சில இடங்களில் போராட்டத்தில் ஈடுபடத் தடை விதித்துள்ள நிலையில், தமக்கு உத்தரவு கிடைக்கப் பெறாததால் பேராட்டத்தை தொடரவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சரண குணவர்தனவுக்கு அதிகுற்றப்பத்திரிகை

முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்தனவுக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவால் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் திங்கட்கிழமை (07) அதிகுற்றப்பத்திரிகை பகிரப்பட்டது.

தேசிய லொத்தர் சபையின் தலைவராக பதவிவகித்த போது, 2006 முதல் 2007ஆம் ஆண்டு காலப்பகுதியில் சபையின் மூன்று வாகனங்களை மோசடியாகப் பயன்படுத்தி, அரசுக்கு 35 மில்லியன் ரூபாய் நடத்தை ஏற்படுத்தியதாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அதிகுற்றப்பத்திரிகை பகிரப்பட்டதன் பின்னர், 30 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் சரண குணவர்த்தவை விடுவிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2



நாடளாவிய ரீதியிலுள்ள

## 18 சதவீத உணவகங்கள் சுகாதாரமற்றவை

நாடளாவிய ரீதியில் உள்ள உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளில் 18 சதவீதமானவை சுகாதாரமற்றவை என்றும் மனித பாவனைக்குத் தகுதியற்ற உணவுகளை அவை வழங்குவதாகவும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## எட்டி உதைத்த உதையிலேயே கருக் கலைந்தது; சிப்பாய் கைது



பிறந்தநாள் விழாவின் போது கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றில் எட்டி உதைத்த கடற்படை சிப்பாய் ஒருவரை, பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவம், கணேமுல்ல, அமுனுகொட எனுமிடத்தில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## கண்டி நகரை அபிவிருத்தி செய்ய அங்கிகாரம்



வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி நகரை முழுமையாக அபிவிருத்தியடைந்த நகரமாக்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை ஏகமனதாக அங்கிகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2



## சலுகைக் கடன்களை இரத்துச் செய்ய தீர்மானம்

### அரசாங்கம் தயாராகிறது என்கிறார் சஜித்

புதிய சட்டமொன்றின் ஊடாக, மத்திய வங்கியின் தலையீட்டின் மூலம், பல்வேறு சந்தர்ப்பங்களில் விவசாய செய்கைகளுக்கு, வியாபார முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட சலுகைக் கடன்களை முற்றாக இரத்து செய்வதற்கு யானை, காகம், மொட்டு அரசாங்கம் தயாராகி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

வேட்புமனு தாக்கல் செய்த

## அரச ஊழியர்களுக்கு 3 மாத விடுமுறை

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்படுமாயின் தேர்தலில் போட்டியிடுவதற்காக சம்பளமற்ற விடுமுறையில் சென்ற அரச ஊழியர்கள், மூன்று மாதங்களுக்கு வேலைக்கு செல்ல முடியாது என்று பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் ஒத்திவைக்கப்படும் எனின் வேட்புமனு தாக்கல் செய்த நாளிலிருந்து மூன்று மாதங்கள் ஊதியம் இல்லாத விடுமுறையில் இருக்க வேண்டும் என்றும் சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வேட்புமனு தாக்கல் செய்து மூன்று மாதங்களுக்குப் பின்னர், ஊழியர்கள் தங்களின் பணிகளுக்கு திரும்ப முடியும் என்று அதில் குறிப்பிடபட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் 9ஆம் திகதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு சுமார் 3,000 அரச ஊழியர்கள் வேட்புமனு தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஜனாதிபதி தலையிட முடியாது

சட்டவிரோதமான முறையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட முயன்றால் முதலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன வெளிவரும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த வருடம் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி அறிவித்திருந்தால் அதற்காக வருந்துவதாகவும் தேர்தலை நடத்துவதற்கான தீர்மானத்தை தேர்தல் ஆணைக்குழுவே எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ராஜபக்ஷர்கள் மீது, தேர்தலை ஒத்திவைப்பதாக ஒருபோதும் குற்றம் சாட்டப்படவில்லை என்று தெரிவித்த அவர், ராஜபக்ஷர்கள் மீது ஏதேனும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு இருந்தால், திட்டமிட்ட திகதிக்கு முன்னதாக தேர்தல் நடத்தப்படிருக்கும் என்றார்.

உள்ளூராட்சி மன்றங்களை இல்லாதொழிக்க முனைப்பு காட்டிய சஜித் பிரேமதாஸவும், அநுரகுமார திஸாநாயக்கவும் இன்று உள்ளூராட்சி தேர்தலை கோருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், முன்னாள் ஜனாதிபதி சிறிசேனாவும் மாகாண சபைத் தேர்தலை இரத்து செய்வதில் முதன்மையாக செயற்பட்டனர். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மக்களின் உரிமை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## பஸ் பள்ளத்தில் பாய்ந்ததில் 3 பேர் பலி; 26 பேர் படுகாயம்

குறித்த விபத்தில் 26 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அதில் ஐவர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக நோர்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

தனியார் நிறுவனமொன்றில் பணிபுரியும் ஊழியர்கள் குழு, 18ஆம் திகதி யாத்திரைக்கு வந்து திரும்பிக்கொண்டிருந்த போதே நோட்டன்பிரிட்ஜ் - கினிகத்தேனை பிரதான வீதியின் நோர்டன்பிரிட்ஜ் டெப்லோ பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (19) இரவு 09.15 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

எதிர்த்திசையில் இருந்து வந்த மற்றுமொரு பஸ்ஸுக்கு வழிவிட முற்பட்ட போதே குறித்த பஸ் வீதியை விட்டு விலகி சுமார் 100 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியதாக நோர்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

> **“ சம்பவதினத்தன்று (19) இரவு இரு இளம் பெண்கள், உயிரிழந்ததுடன், பஸ்ஸில் பயணித்த ஒருவர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்ட நிலையில், 20ஆம் திகதி காலை பஸ்ஸுக்கு அடியில் இருந்து குறித்த இளைஞரின் சடலம் கண்டெடுக்கப்பட்டது**

விபத்தில் காயமடைந்த யாத்திரிகர்களை இராணுவப் படையினர், பொலிஸ் அதிகாரிகள், பிரதேசவாசிகள் இணைந்து வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

காயமடைந்த 26 பேர் ஆரம்ப சிகிச்சைக்காக வட்டவளை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு

> **“ தனியார் நிறுவனமொன்றில் பணிபுரியும் ஊழியர்கள் குழு, 18ஆம் திகதி யாத்திரைக்கு வந்து திரும்பிக்கொண்டிருந்த போதே நோட்டன்பிரிட்ஜ் – கினிகத்தேனை பிரதான வீதியின் நோர்டன்பிரிட்ஜ் டெப்லோ பகுதியில் எதிர்த்திசையில் இருந்து வந்த மற்றுமொரு பஸ்ஸுக்கு வழிவிட முற்பட்ட போதே குறித்த பஸ் வீதியை விட்டு விலகி சுமார் 100 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியது**

மாற்றப்பட்டுள்ளனர்.

அவர்களில் 05 பேர் ஆபத்தான நிலையில், மேலதிக சிகிச்சைக்காக கண்டி மற்றும் பேராதனை போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. காயமடைந்தவர்களில் பஸ் சாரதியும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவதினத்தன்று (19) இரவு இரு இளம் பெண்கள், உயிரிழந்ததுடன், பஸ்ஸில் பயணித்த ஒருவர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்ட நிலையில், 20ஆம் திகதி காலை பஸ்ஸுக்கு அடியில் இருந்து குறித்த இளைஞரின் சடலம் கண்டெடுக்கப்பட்டு வட்டவளை பிரதேச வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பண்டாரவளை, மஹரகம, ஹிக்கடுவ ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 26, 28 வயதான இரு யுவதிகளும் 33 வயதான ஒரு இளைஞனுமே உயிரிழந்துள்ளனர் என்றும் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா ஆரம்ப வைத்தியசாலையின் சட்ட மருத்துவ அதிகாரியிடம் சடலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## சரண குணவர்தனவுக்கு அதிகுற்றப்பத்திரிகை

சரண எம்.பி, அரச நிதியை மோசடி செய்ததுடன், அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தினார் என்ற, குற்றச்சாட்டில், இலஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் 70 ஆவது பிரிவின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் மேலதிக விசாரணைக்கான தினமாக மார்ச் 23ஆம் திகதியை நீதிபதி அறிவித்தார்.

# நடத்த முடியாது

தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதியை வழங்க முடியாது என்று திறைசேரி செயலாளர் தெரிவித்ததாகவும் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளை வெளியிட முடியாது என்று ஆணைக்குழுவிடம் அரசாங்க அச்சக அதிகாரி அறிவித்தாகவும் குறித்த நகர்த்தல் பத்திரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணிக்கு பாதுகாப்பு வழங்க பொலிஸ் மா அதிபர் தவறியுள்ளதாகவும் பொலிஸாருக்கு முன்னர் வழங்கப்பட்ட நிதியை விட தோராயமாக மூன்று மடங்கு அதிகமான நிதியை தேர்தலை நடத்துவதற்கு தமக்கு தேவைப்படுவதாக பொலிஸ் மா அதிபர் அறிவித்தாகவும் ஆணைக்குழு அதில் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக எரிபொருள், வாகனங்கள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குமாறு சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், அந்த கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திறைசேரி செயலாளர், மின்சக்தி மற்றும் வலுச்சக்தி செயலாளர், அரசாங்க அச்சக அதிகாரி, பொலிஸ் மா அதிபர், இலங்கை மின்சார சபை தலைவர், பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவர் உள்ளிட்டோர் தேர்தலுக்கு தேவையான வசதிகளை செய்து தரவில்லை என்று தேசிய தேர்தல் ஆணைக்குழு ஆதாரங்களுடன் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது.

## தடை உத்தரவை மீறியும் ஐ.ம.ச போராட்டம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் மேற்கொண்டதாகக் கூறப்படும் முயற்சிகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் திங்கட்கிழமை (20) நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டம், சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

போராட்டத்தில் ஈடுபடுவதற்கு பஸ்களில் அதிகளவானோர் வருகைதந்த போதும் மழை காரணமாக அவர்களால் பஸ்களில் இருந்து இறங்க முடியவில்லை என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, மருதானை தொழில்நுட்ப கல்லூரி சந்தி பகுதிக்குள் நுழைந்த ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்கு, பொலிஸாரால் கண்ணீர்ப்புகை, நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, நிதியமைச்சின் வளாகம், காலிமுகத்திடல் வளாகம் ஆகியவற்றுக்குள் பிரவேசித்து அரச மற்றும் தனியார் உடைமைகளுக்கு சேதம் விளைவிப்பதைத் தடுக்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு பொலிஸார் விடுத்த கோரிக்கைக்கு அமைய கோட்டை நீதவான் நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்தது.

திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி முதல் இரவு 7 மணி வரை குறித்த பகுதிகளில் மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் போராட்டங்களை தடுக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்ட பேரணி காரணமாக கொழும்பு புறக்கோட்டை, ஓல்கொட் மாவத்தை உள்ளிட்ட வீதிகள் போக்குவரத்துக்கு முற்றாக தடுக்கப்பட்டிருந்தது.

## சலுகைக் கடன்களை இரத்துச் செய்ய தீர்மானம்

மாவனெல்ல நகரில் ஞாயிற்றுக்கிழமை (19) இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நாட்டில், பல்வேறு சந்தர்ப்பங்களில், குறைந்த வட்டி விகிதத்தில் நிதிக் கடன்களை வழங்க மத்திய வங்கி உதவியதாக தெரிவித்த அவர், சுனாமி அனர்த்தம் வந்தபோது அழிந்து போன தொழில் முயற்சிகளை மீள உருவாக்கவும் வியாபார முயற்சிகளையும் மீள உருவாக்கவும் 5, 6 சதவீத வட்டியில் கடன் வழங்கியதாக குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் போது சுற்றுலா வணிகம் வீழ்ச்சி கண்ட போது சுற்றுலா வணிகத்தில் உள்ளவர்களுக்கு பெரும்பாலும் வட்டியில்லா கடன்கள் இதன் அடிப்படையிலேயே வழங்கப்பட்டன.

இது சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவா என கேட்க விரும்புவதாகவும், இது மக்களின் வாழ்க்கையை அழிக்கும் முன்மொழிவாகும். இதன் காரணமாகவே சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு தாம் கோரியதாகவும், அக்கோரிக்கை இதுவரை நிறைவேற்றப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

சந்தை வட்டி விகிதம் 15 சதவீதமாக இருந்தபோது,விவசாயிகளுக்கு 7

> **“ சந்தை வட்டி விகிதம் 15 சதவீதமாக இருந்தபோது, விவசாயிகளுக்கு 7 சதவீத குறைந்த வட்டியில் கடன் வழங்கப்பட்டது. வங்கிக்கு 8 சதவீதம் நட்டம் ஏற்பட்டாலும் மத்திய வங்கி நட்டத்தை ஈடு செய்தது**

சதவீத குறைந்த வட்டியில் கடன் வழங்கப்பட்டது. வங்கிக்கு 8 சதவீதம் நட்டம் ஏற்பட்டாலும் மத்திய வங்கி குறித்த நட்டத்தை ஈடு செய்தது.

தற்போதைய அரசாங்கம் இந்த வட்டி மானிய கடனை இரத்து செய்ய முயல்வதாகவும், ஏற்றுக்கொள்ளப்பட்ட கடன் உத்தரவாதிகள் திட்டத்தை நிறுத்தவும் முயன்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## அரசாங்க அச்சகத்துக்கு பலத்த பாதுகாப்பு

இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து பொரளையில் உள்ள அரசாங்க அச்சகத் திணைக்களத்துக்கு விசேட பாதுகாப்பு வழங்கியதுடன், அந்தப் பகுதியில் பொலிஸ் ரோந்தும் அதிகரிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

மார்ச் 9ஆம் திகதி நடத்த திட்டமிட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் முயன்று வருவதாகக் கூறி, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் எதிர்ப்பு பேரணிகளை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நகர்த்தல் பத்திரம் வாபஸ்

வாக்கெடுப்புக்கு முன்னர் மனுவை பரிசீலிக்கவே நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதாகவும் சுட்டிக்காட்டிய அவர், வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் நகர்த்தல் பத்திரத்தை வாபஸ் பெறுவதாக அறிவித்தார்.

நீதியரசர்களான எஸ். துரைராஜா மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு, முன்னர் குறிக்கப்பட்ட 23ஆம் திகதி மனுவை பரிசீலிப்பதற்கு உத்தரவிட்டது.

தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள், பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்டோரை பிரதிவாதிகளாக பெயரிட்டு குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முழு நாடும் நெருக்கடி நிலையால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தலை நடத்துவதற்கான தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானம், பேரழிவுக்கு வழிவகுக்கும் என்றும் பொது மக்கள் மீது சுமையை ஏற்படுத்தும் என்றும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சீனா தாமதிப்பதே தடையாக உள்ளது

2021 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற வேண்டும் என்று ஆலோசனைகள் வழங்கப்பட்டதாகவும் அப்போதைய மத்திய வங்கி ஆளுநர் அவ்வாறு செய்ய மறுத்ததால் அந்த நடவடிக்கை தாமதமானதாக குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரத்தில் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை உறுதிப்படுத்த இலங்கைக்கு நாணய நிதியத்தின் ஆதரவு தேவை என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, சீனாவின் ஆதரவு இல்லாமலும் இலங்கைக்கான கடனுதவியை வழங்க சர்வதேச நாணய நிதியம் ஆலோசித்து வருவதாக புளூம்பேர்க் இணையத்தளம் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது.

இலங்கைக்கான கடன் மறுசீரமைப்பு திட்டத்துக்கு சீனாவின் ஆதரவு இதுவரை கிடைக்கப்பெறாத நிலையில், சர்வதேச நாணய நிதியம் இந்த விடயம் தொடர்பாக பரீசிலித்து வருகிறது என்றும் சீனா இலங்கை பெற்றுக்கொண்ட கடனை மறுசீரமைப்பது தொடர்பிலான உறுதிப்பாட்டை வழங்குவதை பிற்போட்டுள்ள நிலையிலேயே இந்த தகவல் வெளியாகியது.

## 18 சதவீத உணவகங்கள் சுகாதாரமற்றவை

பொது சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட ஆய்வில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், இலங்கையில் 55 சதவீத உணவகங்கள் மிகவும் நல்ல நிலையில் இருப்பதாகவும் 27 சதவீதம் திருப்திகரமான நிலையில் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

2022 ஆம் ஆண்டில் இலங்கையில் உள்ள உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் குறித்து பொது சுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் இந்த விடயங்கள் தெரியவந்துள்ளதாகவும் 18 சதவீதமான சுகாதாரமற்ற உணவகங்களை குறைந்தபட்சம் பி வகையின் தரத்துக்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்து வருவதாக குறிப்பிட்டார்.

சம்பளப் பிரச்சினைகள் போன்ற பல்வேறு காரணங்களால் ஊழியர்கள் தொடர்ந்து மாற்றப்படுகிறார்கள் என்றும் இதன் காரணமாக ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கவும், சுகாதார சோதனைக்கு உட்படுத்துவதும் நடைமுறைக்கு சாத்தியமில்லை என்றார்.

## கண்டி நகரை அபிவிருத்தி செய்ய அங்கிகாரம்

ஞாயிற்றுக்கிழமை (19) வீதி உலா வந்த ‘குடியரசு பெரஹரா’ நிறைவடைந்ததை அடுத்து திங்கட்கிழமை (20) காலை கண்டி ஜனாதிபதி மாளிகையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றபோதே இந்த அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, கட்டுகஸ்தோட்டைக்கு செல்லும் மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தை துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கட்டுகஸ்தோட்டை, கண்டி மற்றும் குண்டசாலையை மையமாகக் கொண்ட விசேட அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபை, கண்டி மாவட்ட அபிவிருத்திக் குழு, மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள், நகர திட்டமிடல் துறை அறிஞர்கள் அடங்கிய விசேட குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

இக்குழு இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூடி, திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

## எட்டி உதைத்த உதையிலேயே கருக் கலைந்தது; சிப்பாய் கைது

உதைக்கு இலக்கான நான்கு மாத கர்ப்பிணிப் பெண், பொரளை டி சொய்சா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், உதையால் கருக் கலைந்துள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்தேகத்திற்குரிய கடற்படை சிப்பாயின் சகோதரியின் வீட்டில் பிறந்தநாள் நிகழ்வு இடம்பெற்றதுடன் அதில் இந்தக் கடற்படை சிப்பாயும் கலந்துகொண்டார்.

கடற்படை சிப்பாயின் சகோதரியின் கணவரின் சகோதரர் ஒருவருக்கும் சந்தேகநபருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகமடைந்த இராணுவ வீரர், தன்னையும் தாக்கியதாகவும், கர்ப்பிணி மனைவியின் வயிற்றில் பலமுறை உதைத்ததாகவும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

உதைபட்டவுடன் கர்ப்பிணி தரையில் வீழ்ந்ததாகவும்கர்ப்பிணிப் பெண்ணை உதைத்ததாகக் கூறப்படும் கடற்படைச் சிப்பாய் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டதுடன் அவர் புல்முடே பிரதேசத்தில் உள்ள முகாமில் பணிபுரிந்து வந்தார்.

அம்பாரை மாவட்ட தாழ்நிலப் பகுதியில் வெள்ளம்

# திருக்கோவிலில் 1,500 குடும்பங்கள் பாதிப்பு

■ எஸ்.கார்த்திகேசு, வி. சுகிர்தகுமார்

அம்பாரை மாவட்டத்தில் கடந்த இரண்டு நாள்களாக தொடர்ந்து பெய்துவரும் கனமழை காரணமாக, தாழ்நிலப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று (20) 240 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியதுடன், திருக்கோவில் பிரதேசத்தில் சுமார் 10க்கு மேற்பட்ட கிராமசேவையாளர் பிரிவுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ. கஜேந்திரன், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்குச் சென்று, மக்களின் நிலைமைகளை பார்வையிட்டார். 1,500க்கும் மேற்பட்ட குடும்பங்கள், வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன என பிரதேச செயலாளர் ரீ. கஜேந்திரன் தெரிவித்தார்.

கிராமங்களில் உள்ள வெள்ள நீரை வெளியேற்றும் பணியில், திருக்கோவில் பிரதேச செயலக அனர்த்தப் முகாமைத்துவப் பிரிவுடன் இணைந்து விநாயகபுரம் மீனவ சங்க நிர்வாகிகள், தம்பிலுவில் உரக்கை விவசாய அமைப்பு நிர்வாகிகள், இராணுவத்தினர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் ஒன்றினைந்து விநாயகபுரம், கோரைக்களப்பு, திருக்கோவில், முறாவோடை, தம்பிலுவில், பெரிய முகத்துவாரம் என்பன அகழப்பட்டு, வெள்ளநீர் கடலுக்கு விடப்பட்டது.



இதேவேளை, ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல பிரிவுகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அரச மற்றும் அரச சார்பற்ற திணைக்களங்கள், பாடசாலைகள் சிலவற்றில் வெள்ளம் புகுந்துள்ள நிலையில், அலுவலகங்களின் செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

இதேநேரம் அறுவடைக்குத் தயாராகியிருந்த வயல் நிலங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க, ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி. பபாகரன் தலைமையிலான கணக்காளர் க. பிரகஸ்பதி சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ரவிச்சந்திரன் உள்ளிட்ட பிரதேச செயலக அதிகாரிகள் வெள்ள அனர்த்தம் தொடர்பில் நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டனர்.

சுற்றுலா பயணிகளுக்கே ‘வடதாரகை’ முன்னுரிமை

# அத்தியாவசிய தேவை கருதிய பயணிகளுக்குப் பாதிப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

யாழ்ப்பாணம் - நெடுந்தீவுக்கான கடல் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான ‘வடதாரகை’ படகில், சுற்றுலாப் பயணிகளை முன்னுரிமைப் படுத்தி அதிகளவில் ஏற்றிவிட்டு, அதன்பின்னரே ஏனைய அத்தியாவசிய தேவைகளுக்கு செல்லும் பயணிகள் பயணிப்பதற்கு அனுமதிப்பதால், அரச உத்தியோகத்தர்கள், பொதுத் தேவைகளுக்கு செல்வோர் எனப் பலரும் பாதிக்கப்படுவதுடன் நெடுந்தீவுக்கான பயணிளை கடற்படையினர் மிருகங்களை போல் நடத்துவதாகவும் பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.



இலவச போக்குவரத்து சேவையில் ஈடுபட்டுவந்த ‘குமுதினி’ படகு, கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக பழுதடைந்த நிலையில், திருத்தப் பணிகளுக்கு கொண்டு செல்லப்பட்டதை அடுத்து, ‘வடதாரகை’ படகு மாத்திரமே சேவையில் ஈடுபட்டு வருவதுடன், தினமும் காலை ஏழு மணி மற்றும் 2.30 மணிக்கு நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்கும் காலை 8.30, நான்கு மணிக்கு குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கும் சேவையில் ஈடுபடுவதுடன் 100 வரையான பயணிகளை மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஏற்றிச் செல்ல கடற்படையினரால் அனுமதிக்கப்படுகிறது.

இவ்வாறான நிலையில், நெடுந்தீவு பிரதேச செயலகம், பிரதேச சபை ஆகியவற்றில் பணியாற்றும் 70 சதவீதமான உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து பணிகளுக்கு சென்று வருகின்றனர். இந்த நிலையில், பயணிகள் மிருகங்களைப் போல் கடற்படையினரால் அடைத்து வைத்துவிட்டு, முதலில் சுற்றுலாப் பயணிகளை ‘வடதாரகை’ படகில் ஏற்றி விட்டு, எஞ்சிய எண்ணிக்கைக்கு ஏற்றவாறு பொதுமக்கள் செல்வதற்கு அனுமதிக்கப்படுவதுடன் ஏனைய பயணிகள் தடுத்து நிறுத்தப்படுகின்றனர். இவ்வாறு பல்வேறு தேவைகளை கருதி பயணத்தை மேற்கொள்ள வேண்டிய பயணிகள், குறிகாட்டுவானிலும் நெடுந்தீவிலும் தடுத்துநிறுத்தப்படுவதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.



தேர்தல் ஒத்தி வைப்பு:

## கண்டித்து கந்தளாயில் ஆர்ப்பாட்டம்

■ ஹஸ்பர்

தேர்தலை ஒத்திவைத்து, ஜனநாயகத்தை தடுக்கும் அரசாங்கத்தின் கோழைத்தனமான செயற்பாட்டுக்கு எதிராக தேசிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், கந்தளாய் பஸ்தரிப்பு நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் (19) நடைபெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை செயற்பாட்டாளர் சட்டத்தரணி அருன் ஹேமச்சந்திர தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிண்ணியா செயற்குழு உறுப்பினர்களான எம்.இ.எச்.எம் ராபி, அஷ்ஷெய்ஹ் பஷீர் ஆகியோருடன் பல சமூக செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.

## ஐந்து நாள் நகர்வலம்

■ அ. அச்சுதன்

திருக்கோணேஸ்வர பெருமானின் வருடாந்த நகர்வலம் நேற்று முன்தினம் (19) மாலை ஆறு மணிக்கு ஆரம்பமானது. திருக்கோணேஸ்வர பெருமான், கணபதி, வீரசக்தி, மாதுமை அம்பாள் சமேதராக கோவிலில் இருந்து புறப்பட்ட இந்த நகர்வலம், வியாழக்கிழமை (23) வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





## உயிருக்கு போராடும் யானைக்கு சிசிச்சை

■ க. விஜயரெத்தினம்

மட்டக்களப்பு ,கொம்மாதுறை தீவு பகுதியில், காயப்பட்ட காட்டு யானை, 10 நாள்களாக உயிருக்குப் போராடிவருகிறது. மட்டக்களப்பு, அம்பாறை வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சிகிச்சையளித்து, பராமரித்து வருகிறார்கள்.

செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கொம்மாதுறை தீவுப் பகுதியில் காட்டு யானை, காலில் ஏற்பட்ட சூட்டுக் காயம் காரணமாக, நடக்க முடியாமல், உயிருக்குப் போராடி வந்தது. குறித்த யானை, கட்டுத் துப்பாக்கி சூட்டுக்கு உள்ளாகியிருக்கலாம் எனவும் காலில் துப்பாக்கி சூடு பட்டுள்ளதால் எலும்பு உடைந்திருக்கலாம் எனவும் அம்பாறை வனஜீவராசிகள் திணைக்களத்தின் வைத்தியர் நிஹால் புஷ்பகுமார தெரிவித்தார்.

மட்டக்களப்பு வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள்,



உயிருக்கு போராடும் யானைக்கு உணவளித்து, பராமரித்து வருகின்றனர்.

## கல்முனையில் சக்தி தையல் ஆடை தொழிலகம்

■ அஸ்ஹர் இப்ராஹிம்

கல்முனை, பாண்டிருப்பில் வசித்த புலம்பெயர் உறவுகளின் அனுசரனையில் பாண்டிருப்பு - 02 இல் அமைந்துள்ள ஸ்ரீவடபத்திர காளியம்மன் கோவில் கட்டடத்தில், சக்தி தையல் ஆடைத் தொழிலகம், சமய நிகழ்வுடன் திறந்து வைக்கப்பட்டது.

சக்தி ஆடைத் தொழிலகத்தின் இணைப்புச் செயலாளர் சீ. ரவிகரனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரீ.ஜே அதிசய ராஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இத்தொழிலகத்தை திறந்து வைத்தார்.

மேலும் இந்நிகழ்வில், கௌரவ அதிதியாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வசந்தினி யோகேஸ்வரன், விசேட அதிதியாக சுவிற்சர்லாந்தின் புலம்பெயர் உறவுகளின் பிரதிநிதியும், இந்நிகழ்வுக்கு அனுசரனை வழங்கியவர்களின் ஒருங்கிணைப்பாளருமான இ. விஜயகுமாரன் உட்பட மாதர் சங்கத்தினரும் ஊர் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.















வட்டுக்கோட்டை, யாழ்ப்பாண கல்லூரியின்

## 200 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் ஆரம்பம்

■ நிதர்சன் வினோத்

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாண கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, பல்வேறு நிகழ்வுகள் கல்லூரியின் அதிபர் ருஷிறா குலசிங்கம் தலைமையில் சம்பிரதாய பூர்வமாக நேற்று (20) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வாக, வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபையின் பேராலயத்தில் விசேட ஆராதனை வழிபாடுகள் இடம்பெற்று, 200ஆவது ஆண்டு பொறிக்கப்பட்ட கேக்கை தென்னிந்திய திருச்சபையின் பேராயர் வண. பத்ம தயாளனால் வெட்டப்பட்டதுடன் கல்லூரியின் அதிபரால் யாழ்ப்பாணக் கல்லூரிக்கான வலைத்தளமும் அங்குரார்ப்பனம் செய்து வைக்கப்பட்டது.

புனர்நிர்மாணம் செய்யப்பட்ட கல்லூரியின் பிக்னல் ஞாபகார்த்த மைதானத்தில், கல்லூரியின் 200ஆவது ஆண்டுக்கான விசேட சின்னம், கல்லூரியின் அதிபர் ருஷிறா குலசிங்கம், தென்னிந்திய திருச்சபையின் பேராயர் வண. பத்ம தயாளன் ஆகியோரால் திரைநீக்கம் செய்யப்பட்டது.

சமநேரத்தில், கல்லூரியின் வர்ணம் தாங்கிய பலூன்களும் ஆகாயத்தில் பறக்க விடப்பட்டன. தொடர்ந்து, 200 ஆவது ஆண்டுக்கான ஜேர்சி, சொக்ஸ், நாட்காட்டி என்பன அறிமுகப்படுத்தப்பட்டதுடன் 200 மரக்கன்றுகள் நடும் செயற்றிட்டமும் முன்னெடுக்கப்பட்டன.

உருத்திரபுரத்தில் வெட்டிப் படுகொலை:

## மரணவீட்டில் வாக்குவாதம் வாள் வெட்டில் முடிந்தது

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, உருத்திரபும் பகுதியில் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட, சந்தேக நபரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை, விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உருத்திரபுரம், சிவநகர் பகுதியில் 13ஆம் திகதி, மரணவீட்டில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டை அடுத்து, இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதல், வாள் வெட்டில் முடிந்தது.

சிவநகர் பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய சண்முகசுந்தரம் யசோதரன் என்ற நான்கு பிள்ளைகளின் தந்தை உயிரிழந்ததுடன், நான்கு பேர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவத்துடன் தொடர்பு பட்ட மூன்று சந்தேக நபர்கள், கைது செய்யப்பட்டு 27ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆறு ஆண்டு நிறைவு:

## கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம்

■ மு. தமிழ்செல்வன்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு, ஆறாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம், 2017ஆம் ஆண்டு மாசி மாதம் 20 திகதி ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் (20) ஆறு ஆண்டு நிறைவடைந்த நிலையில், போராட்டம் ஆரம்பித்த இடமான கந்தசுவாமி கோவில் முன்றலில் இருந்து டிப்போ சந்தி வரை பேரணி இடம்பெற்றது.



## நிலநடுக்கத்தில் உயிரிழந்தோருக்கு மன்னாரில் அஞ்சலி

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

துருக்கி, சிரியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்த மக்களுக்கான துயர் பகிர்வு நிகழ்வு நேற்று (20) காலை, மன்னார் பஸார் பகுதியில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில், அதன் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், உயிரிழந்த மக்களுக்காக சர்வமத பிரார்த்தனையும் சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலியும் செலுத்தப்பட்டது.





# சிவனைத் தரிசிக்க சென்றவர்கள் தரிசிக்காமல் திரும்பிச் சென்றனர்

பி.கேதீஸ்

கடந்த சில நாள்களாக நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் அதிகளவான யாத்திரிகர்கள் சிவனொளிபாதமலைக்கு வருகை தந்தமையால், பெரும்பாலானோருக்கு அங்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டதாக நல்லத்தண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர தெரிவித்தார்.

ஹட்டன், நல்லத்தண்ணி வீதி ஊடாக யாத்திரிகர்களின் வருகை அதிகரித்தமையால் பெரும் அளவிலான யாத்திரிகர்கள் சிவனொளிபாதமலைக்கு செல்ல முடியாமல் திரும்பிச் சென்றனர்.

இதற்கமைய, நல்லத்தண்ணியிலிருந்து சிவனொளிபாதமலை வரை பயணிக்க 12 மணித்தியாலங்களுக்கு மேல் செலவிட்டதாகவும், பெருமளவான யாத்திரிகர்கள் சீத்தகங்குள பகுதியிலிருந்து இடைநடுவே திரும்பிச் சென்றுள்ளனர்.

கடும் போக்குவரத்து நெரிசல் காரணமாக குறிப்பிட்ட சில இடங்களில் சிலர் தமது உறவினர்களை தவறவிட்டதுடன், பணப்பைகள், தங்க உடமைகளையும் பலர் இழந்த சம்பவங்களும் அதிகம் இடம்பெற்றுள்ளன.

பாடசாலை விடுமுறை, சனி, ஞாயிறு விடுமுறை என்பன காரணமாக பெருமளவான யாத்திரிகர்கள் சிவனொளிபாதமலையை தரிசிக்க வந்ததாகவும் அவர்கள் எதிர்பார்க்காத பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர் எனவும் பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர தெரிவித்தார்.

இதேவேளை, யாத்திரிகர்கள் பயணித்த வாகனங்கள் என்பன நல்லதண்ணியிலிருந்து மவுஸ்ஸாக்கலை சந்தி வரை 10 கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரம் நிறுத்தப்பட்டதோடு வாகனங்களை வீதியோரத்தில் நிறுத்துவதற்கு இடம் கிடைக்காமல் சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டதாகவும் மஸ்கெலியா பிரதேச சபையின் தவிசாளர் சண்முகம் செம்பகவள்ளி தெரிவித்தார்.

“தேர்தலை பிற்போடுவதற்கு

# பயமே முக்கியம்”

## முன்னாள் எம்.பி திலகராஜ் தெரிவித்தார்

ரஞ்சித் ராஜபக்ஷ

மக்கள் மத்தியில் செல்வதற்கு ஏற்பட்டுள்ள பயம் காரணமாகவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் செயற்பட்டு வருவதாக, மலையக அரசியல் அரங்கத்தின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்தார்.

ஹட்டனில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், உள்ளூராட்சிமன்றத் தேர்தலானது இரண்டு, மூன்று வாரங்கள் பிற்போடப்பட்டால் பரவாயில்லை. ஆனால்



ஏப்ரல் மாதத்துக்கு முன்னதாக தேர்தல் நடத்தப்பட வேண்டும். அவ்வாறு இல்லையேல் நாட்டுக்குள் ஜனநாயகம் இல்லாமல் போகும்.

தேர்தலை நடத்துவதற்கு பணம் இல்லாமல் போனாலும் நாட்டுக்குள் ஜனநாயகத்தை பாதுகாக்க பல வெளிநாட்டு நிறுவனங்கள் செயற்படுகின்றன. அந்த நிறுவனங்கள் ஊடாக தேர்தலை நடத்த பணம் பெற்றுக்கொள்ள முடியும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து அறிவித்த பின்னர், தேர்தல் ஆணைக்குழுவுக்கு அரசியலமைப்பின் ஊடாக பாரிய அதிகாரங்கள் கிடைத்துள்ளன. அதனால் தான் அரச நிர்வாக அமைச்சு மற்றும் நிதியமைச்சின் செயலாளர்கள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வருகை தந்து காரணங்களை முன்வைத்தனர்.

எனவே நாட்டில் தேர்தலை நடத்தவும் ஜனநாயகத்தை நிலை நிறுத்தவும் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க, தமது கட்சி மக்களுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கவுள்ளதென மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்தார்.

# புதிய உறுப்பினர் தெரிவு

எஸ்.கே. குமார்

நுவரெலியா மாநகர சபைக்கு புதிய உறுப்பினராக திருமதி கல்யாணி சத்தரசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமன கடிதத்தை ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டார வழங்கினார். முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து, நுவரெலியா மாநகர சபை உறுப்பினர் பதவியை திருமதி கல்யாணி சத்திரசிங்க பெற்றுக்கொண்டார்.

நுவரெலியா மாநகர சபை உறுப்பினராக இருந்த



மஹிந்த சில்வாவுக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து ஐக்கிய தேசிய கட்சி அங்கத்துவ, நுவரெலியா மாநகர சபை உறுப்புரிமையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அந்த வெற்றிடத்துக்கே கல்யாணி சத்திரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

# வேனில் மோதுண்டு காயமடைந்தவர் மரணம்

ரஞ்சித் ராஜபக்ஷ

நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக, டொல்பின் ரக வேனில் மோதுண்டு காயமடைந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை, நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று (20) இடம்பெற்றுள்ளது.

நாவலப்பிட்டி நகரில் இருந்து கொத்மலை வரைக்கும் பயணித்துக்கொண்டிருந்த வேன், நேற்றுக்காலை 9.15



மணியளவில் நாவலப்பிட்டி நகரத்திலுள்ள குறுக்கு வீதிக்குள் செலுத்திய வேளையிலேயே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது. அதில், நாவலப்பிட்டி தேசிய வீடமைப்புத் தொகுதியைச் சேர்ந்த 59 வயதான எஸ்.பீ ஹேரத் என்பர் மரணமடைந்தார்.

# சமனல நீர்மின் உற்பத்தி நிலைய மின்னுற்பத்தி தற்காலிகமாக இடைநிறுத்தம்

ரஞ்சித் ராஜபக்ஷ

கினிகத்தேனை, பொல்பிட்டிய சமனல நீர்மின் உற்பத்தி நிலைய உபகரணங்களில் மேற்கொள்ளப்படும் திருத்தவேலைகள் காரணமாக சனிக்கிழமையில் இருந்து (18) குறித்த நீர்மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்தி செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுள்ளதாக மின் உற்பத்தி நிலையத்தின் பொறியியலாளர் தெரிவித்தார்.

குறித்த நீர்மின் உற்பத்தி நிலையம் ஊடாக, 75 மெகாவோட் மின் உற்பத்தி செய்யப்படுவதுடன் லக்ஸபான நீர்மின் உற்பத்திக்காக பெற்றுக்கொள்ளப்படும் நீர், லக்ஸபான நீர்த்தேக்கத்திலிருந்து சுரங்க வழியாக சமனல நீர்மின் உற்பத்தி நிலையத்துக்கு கொண்டு செல்லப்படுகின்றது.

சமனல நீர்மின் உற்பத்தி நிலையத்தின் மின்சார உற்பத்தி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதால், லக்ஸபான நீர்மின் உற்பத்தி நிலையத்தின் மின்சார உற்பத்தியின் பின்னர் களனி ஆற்றுக்கு நீரைத் திறந்து விடுவதற்கு லக்ஸபான நீர்மின் நிலையத்தின் கட்டுப்பாட்டு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.



# பிரதான வீதியை புனரமைக்கும் வரை எதிர்ப்பை கைவிடோம்

ஆ.ரமேஸ்

வலப்பனை பிரதேச சபைக்கு உட்பட்ட கொட்டம்ப திக்கல கிராமசேவகர் பிரிவில் வசிப்பவர்கள் பயன்படுத்தும் பிரதான வீதியை புனரமைத்து தருமாறு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்தும் வீதியை புனரமைப்பதற்கான அக்கறை காட்டவில்லை என பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

வலப்பனை, தெரிப்பெய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டம்ப, வெளிகெட்டிய, உடுகம , திக்கல, உஸ்பனாஎல்ல, மெதிகந்த என ஐந்து கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கி நான்கு வருடங்களுக்கு முன்னர், திக்கல கிராமத்தில் 18 கோடி ரூபாய் செலவில் குடிநீர் அபிவிருத்தி திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதன்போது இத்திட்டதை மேற்கொண்டவர்கள் கொட்டம்ப சந்தியிலிருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள திக்கல கிராம பாடசாலை வரையான பிரதான வீதியை பயன்படுத்தியுள்ளதுடன், கட்டுமானத்துக்கான பொருட்களை கனரக



வாகனங்களில் கொண்டு சென்றனர். இப்போது, அவ்வீதி மக்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளது.

எனினும் தமது அபிவிருத்தி திட்டத்தின் பின்னர், இவ்வீதியை மீள புனரமைத்து தருவதாக அபிவிருத்தி திட்டத்தை முன்னெடுத்த அதிகாரிகள், திக்கல மக்களுடன் ஒப்பந்தமும் செய்துள்ளனர்.

இந்தத் திட்டம் தற்போது நிறைவுக்கு வந்து திறப்பு விழா செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் வீதியை புனரமைத்துத் தருவதாக வழங்கிய வாக்குறுதியை மீறி, வீதியை புனரமைக்காது திறப்பு விழாவை நடத்த முற்பட்டதால், பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்ப்பு நடவடிக்கை ஈடுப்பட்டனர்.

எனவே, தமது கோரிக்கையை நிறைவேற்றித்தரும் வரையில் தமது எதிர்ப்பை கைவிடப் போவதில்லை எனவும் திக்கல பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

## பொரலந்த பிரதேசத்தில் 10 ஏக்கர் விவசாய செய்கைகள்

# ஸ்கேட்டர் இயந்திரத்தால் அழிக்கப்பட்டன

ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியா, பொரலந்த பிரதேசத்தில் 10 ஏக்கர் விவசாயக் காணியில் உள்ள பயிர்களை, ஸ்கேட்டர் இயந்திரத்தை பயன்படுத்தி அழிப்பதற்கு நீர்ப்பாசன திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

ஆவாஎலிய, பொரலந்த பிரதேசத்தில் அரசாங்கத்துக்குரிய 10 ஏக்கர் விவசாயக் காணியில் உற்பத்தி செய்யப்பட்டிருந்த மரக்கறிகள், நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகளால் ஸ்கேட்டர் இயந்திரத்தை பயன்படுத்தி அழிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக அங்கு பயிர்செய்கையில் ஈடுபட்டிருந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா நகர எல்லையை அண்மித்துள்ள நகரை அழகுபடுத்துவதற்காக அரசாங்கத்திற்கு சொந்தமான காணி வருடாந்த குத்தகை அடிப்படையில் நுவரெலியா மாநகர சபைக்கு மாற்றப்பட்ட நிலையில்,



அந்த நிலத்தில் 60 வருடங்களுக்கு மேலாக மரக்கறி பயிரிட்ட விவசாயிகள் காணிக்கு உரிமை கோரி, நுவரெலியா மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

எனினும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதையடுத்து, நீர்பாசன திணைக்கள அதிகாரிகள், விவசாயிகளுக்கு எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ஸ்கேட்டர் இயந்திரத்தை கொண்டு வந்து, முழு விவசாயத்தையும் அழித்துள்ளனர்.

அங்கு பயிரிடப்பட்டிருந்த கரட், வெண்டிக்காய் உள்ளிட்ட உற்பத்திகள் அறுவடைக்கு இன்னும் இரண்டு மாதங்கள் உள்ள நிலையில், இயந்திரம் மூலம் அழிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இரசாயன உரங்கள் மற்றும் விவசாய இரசாயனங்கள் இல்லாத காலப்பகுதியில், பயிர் செய்கையின் பலன் கிடைக்கும் வரை, மரக்கறி தோட்டத்தை அழிக்க வேண்டாம் என, நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தும், அதற்கு அதிகாரிகள் பதிலளிக்கவில்லை என விவசாயிகள் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் நடவடிக்கை எடுக்குமாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# ஜனாதிபதிக்கு அருகில் வெடிபொருளுடன் ஒருவர் சிக்கினார்

ஷேன் செனவிரத்ன

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மினிபே குளக்கட்டின் புனரமைப்பு நடவடிக்கைகளை கண்காணித்துக் கொண்டிருந்த போது, அவருக்கு அருகில் ஓர் இடத்தில் வெடி பொருட்களை பயன்படுத்தி, மீன் பிடித்துக்கொண்டிருந்த சிவில் பாதுகாப்பு படையைச் சேர்ந்த ஒருவர், ஹசலக்க பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரட்டம்பே மாணவர் படையணியின் முகாமில் நடைபெற்ற வைபவத்தில் நேற்று (19) கலந்துகொண்டதன் பின்னர், குளக்கட்டின் புனரமைப்பு பணிகளை ஜனாதிபதி பார்வையிட்டார்.

கைது செய்யப்பட்ட நபர், உடதும்பர வனஜீவராசிகள் காரியாலயத்தால் நிர்வகிக்கப்படும் யானை வேலிகளை பாதுகாக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தவர் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

# தோட்டக் கம்பனிகளுடன் முரண்பட்டு பயணிக்க முடியாது

1,000 ரூபாய் சம்பள உயர்வின் பின்னர், தொழிற்சங்கங்களுக்கும், கம்பனிகளுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், இவ்வாறு முரண்பட்டுக் கொண்டு பயணிக்க முடியாது என்றார்.

மாத்தளை நகர மண்டபத்தில் நேற்று (20) நடைபெற்ற மக்கள் சந்திப்பின்



போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், கூட்டு ஒப்பந்தத்துக்கு வருகின்றோம் எனக் கூறும் கம்பனிகள், முதுகுக்கு பின்னால் வேறொன்றை செய்கின்றன. வழக்கு தொடுக்க முற்படுகின்றன என்றார்.

அரசாங்கத்துடன் பேச்சு நடத்தி, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை வழங்குவதற்கு கம்பனிகளுக்கு ஒரு வாய்ப்பை வழங்குகின்றோம். இந்த வாய்ப்பை கம்பனிகள் தவறவிட்டால், நாம் சம்பள நிர்ணய சபைக்கு நிச்சயம் செல்வோம். 2 ஆயிரம் முதல் 2, 500 வரை சம்பள உயர்வு கோரப்படும் என்றார்.

கோடாலிபறிச்சான் கல்வெட்டின் தகவல்:

# வன்னியில் மூவேந்த வேளானும் வேளைக்காறப் படையினரும்

**இலங்கையில் வாழும் ராஜராஜசோழனின் வழித்தோன்றல்கள்!**

**மாங்குளம் பிரதேசத்தில் உள்ள, 'கோடாலிபறிச்சான்' கல்வெட்டு தரும் புதிய தகவல்!**

**வரலாற்று பேராசிரியர் ப. புஷ்பரட்ணமும் அவருக்குத் துணைநிற்கும் ஆர்வலர் குழுவும் களஆய்வு!**


கலாநிதி கா. இந்திரபாலா
(யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முதலாவது வரலாற்றுப் பேராசிரியர்)


இற்றைக்கு 900 ஆண்டுகளுக்கு முன்னர், வன்னியில் ஓர் இடத்தில் 'மூவேந்தவேளான்' என்ற விருதைப் பெற்ற படைத்தலைவன் ஒருவனும் அவனுடைய வேளைக்காரப் படையினரும், தங்கள் சேவைக்காக மன்னன் வழங்கியிருந்த நிலத்தில் கோவில் ஒன்றைச் சூழ அம்பலம், கிணறு, கேணி ஆகியவற்றை அமைத்தனர். அந்த நிகழ்ச்சியைப் பிரகடனப்படுத்தும் வகையில் அவர்கள், தூண் ஒன்றின் நான்கு பக்கங்களிலும் கல்வெட்டு ஒன்றைப் பொறித்துவைத்தனர்.

காலப்போக்கில், கோவிலும் கிணறும் அம்பலமும் கைவிடப்பட்டுக் காடு படர்ந்தது. கட்டடங்கள் இடிந்து வீழ்ந்தன. கல்வெட்டும் பல இடங்களில் சிதைவுற்றது. கோவிலின் கதையும் கட்டியவர்கள் செயல்களும் மறக்கப்பட்ட வரலாறாகியது.

மறைந்த வரலாற்றை மீட்பதற்கு ஆர்வம் கொண்டோர் முயன்றதால் கட்டட இடிபாடுகளும் கல்வெட்டும் சில மாதங்களுக்கு முன்னர் கண்டறியப்பட்டன.









## கல்வெட்டு

பேராசிரியர் ப. புஷ்பரட்ணமும் அவருக்குத் துணைநிற்கும் ஆர்வலர் குழுவும் கல்வெட்டு இருக்கும் இடத்துக்குச் சென்று, ஆய்வு செய்தனர். கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட காலத்தில் இந்த இடம் என்ன பெயரைப் பெற்றிருந்ததோ தெரியவில்லை. இன்று அது 'கோடாலிபறிச்சான்' என்ற பெயரைப் பெற்றுள்ளது.

இந்த இடம், வவுனியா மாவட்டத்தில் மாங்குளம் பிரதேசத்தில் உள்ளது.

## ஜெயபாகு தேவர்

கல்வெட்டின் காலம் தெளிவாகத் தரப்பட்டுள்ளது. அது, ஜெயபாகுதேவருடைய பன்னிரண்டாவது (ஆட்சி) ஆண்டு. இம்மன்னன் பொலன்னறுவையில் 1110/11 இல் அரச பதவி பெற்றவன். ஆகவே, இக் கல்வெட்டு 1122 இன் இறுதியில் அல்லது 1123 இன் முற்பாதியில்பொறிக்கப்பட்டது.

ஜெயபாகுதேவருடைய ஆட்சியாண்டைக் குறிப்பிடும் வேறும் பல தமிழ்க் கல்வெட்டுகள் இலங்கையில் கிடைத்துள்ளன.

## வேளைக்காறர்

கல்வெட்டுப் பொறிக்கப்பட்டதன் நோக்கம் இதுதான். ஒரு வேளைக்காறப் படையைச் சேர்ந்தோர் தங்களுக்கு ஜீவிதமாகக் கிடைத்த நிலத்தில், ஒரு கோவிலின் தேவைகளுக்காக அம்பலமும் கிணறும் கேணியும் அமைத்தனர். இதைக் கல்லில் எழுதிப் பதிவுசெய்தனர்.

## யார் இந்த வேளைக்காறர்?

சோழர் ஆட்சிக் காலத்தில் மன்னர்களுக்குப் பாதுகாப்பளித்தும் போர்களில் பங்குகொண்டும் பெரிதும் உதவிய ஒரு படைப் பிரிவினர் இந்த வேளைக்காறர் ஆவர். 'ஆபத்து வேளையில் உதவுவோர்' என்ற காரணத்தால், அவர்கள் 'வேளைக்காறர்' என்ற பெயரைப் பெற்றனர் என்பது, சில வரலாற்று ஆசிரியர்களுடைய கருத்தாகும்.

இலங்கையில் பல மன்னர்களுக்கு மிகவும் நம்பகமான படையினராக வேளைக்காறர் பணிபுரிந்தனர். அவர்களுடைய கல்வெட்டுகள் பல கிடைத்துள்ளன. இவற்றுள் மிகவும் முக்கியமானது, பொலன்னறுவையில் உள்ள ஒரு கல்வெட்டு.

முதலாம் விஜயபாகு 1110/11 இல்இறந்தபோது, உருவாகிய குழப்பமான அரசியல் சூழ்நிலையில் பௌத்த சங்கத்தின் பிரமுகர்களுள் ஒருவரான ராஜகுருவும் அமைச்சர்களும் கூடி, தளதாய்ப் பெரும்பள்ளியையும் (அன்றைய தளதா மாளிகை) அதன் சொத்துகளையும் 'உங்கள் ரக்ஷையாக வேண்டும்' (அதாவது, 'உங்கள் பாதுகாப்பில் இருக்கவேண்டும்') என்று வேளைக்காறப் படையினரிடம் ஒப்படைத்தனர். இப்பொறுப்பை ஏற்ற வேளைக்காறர், 'தளதாய்ப் பெரும்பள்ளியையும் அதன் சொத்துகளையும் பரிவாரத்தாரையும் பட்டும் கெட்டும் காக்கக் கடவோமாக' என்று சபதம் செய்து, இதைச் 'செம்பிலும் கல்லிலும் வெட்டுவித்துக் குடுத்தோம்' என்று குறிப்பிட்டுள்ளனர். கல்லில் வெட்டியது கிடைத்துள்ளது; செப்பேடு கிடைக்கவில்லை.

## மூவேந்தவேளான்

கோடாலிபறிச்சான் கல்வெட்டில் வேளைக்காறர் தலைவனாகக் காணப்படுபவன் மூவேந்தவேளான். இப்பெயர், உண்மையில் ஒரு விருது. பெருந்தொகையான நிர்வாகத் தலைவர்களுக்கும் படைத்தலைவர்களுக்கும் சோழ மன்னர் இவ்விருதைக் கொடுத்தனர்.

தமிழ் நாட்டை முற்காலத்தில்ஆண்ட மூவேந்தர் (சோழ - சேர - பாண்டியர்) பிற்கால மன்னர் மனதைக் கவர்ந்தனர் போலும். சோழருக்கு முன்னர் எட்டாம் நூற்றாண்டில் பாண்டியரும் இதை ஒத்த ஒரு விருதான, 'மூவேந்த மங்கலத்துப் பேரரையன்' என்ற விருதை வழங்கியிருந்தனர்.

இலங்கையில் சோழர் ஆட்சி தொடங்கியபோதே, ஒரு 'மூவேந்தவேளான்' வந்திருந்தான். அவன், ராஜேந்திர சோழன் நடத்திய படையெடுப்புக்குத் தலைமை தாங்கிய 'ஜயங்கொண்ட சோழ மூவேந்தவேளான்' ஆவான்.

இவன், படையெடுப்புக் காலத்தில் இருந்து, நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் வருபவன் கோடாலிபறிச்சான் கல்வெட்டில் வரும் மூவேந்தவேளான். ஆகவே, இவன் இலங்கையில் சோழர் ஆண்டகாலத்தைச் சேர்ந்தவன் அல்லன். எனினும், சோழ மன்னன் ஒருவனிடம் இருந்து, 'மூவேந்தவேளான்' என்ற விருதைப் பெற்று வந்தவன் எனலாம்.

ஏனெனில், இலங்கை மன்னன் ஒருவன், இந்த விருதைக் கொடுத்திருக்க முடியாது. அப்படியானால்,டு இந்த 'மூவேந்தவேளான்' யார்? இவன் எப்படி வேளைக்காறப் படையுடன் இலங்கைக்கு வந்தான்? இவை போன்ற பல வினாக்களைக் கோடாலிபறிச்சான் கல்வெட்டு எழுப்புகின்றது.

பொலன்னறுவையில் விஜயபாகு இறந்தபோது அவனுடைய தம்பி ஜயபாகு மன்னனாக, விஜயபாகுவின் மகன் விக்கிரமபாகு அவனை எதிர்த்துப் போர்தொடுத்தான்.

அந்தநேரத்தில், ஜயபாகு சோழ நாட்டில் இருந்து, வேளைக்காறப் படை ஒன்றின் உதவியைப் பெற்றிருக்கலாம். அக்காலச் சோழ மன்னனாகிய குலோத்துங்கனே, இந்த உதவியை வழங்கி இருக்கலாம். பொலன்னறுவை விஜயபாகுவும் சோழ குலோத்துங்கனும் பகைவர்களாக இருக்கவில்லையா என்ற கேள்வி, சிலர் மனதில் எழலாம். விஜயபாகுவின்ஆட்சியின் தொடக்கத்தில், அது உண்மைதான். இன்று போல் அன்றும்,ட அரசியல் பகைமை என்பது நிரந்தரமானது அல்ல!

## இலங்கையில் குலோத்துங்க சோழன் மகள்

கோடாலிபறிச்சான் கல்வெட்டின் காலத்துக்குச் சில ஆண்டுகள் முன்பாகக் குலோத்துங்க சோழன் மகள் ஒருவர், 'சுத்தமல்லியாழ்வார்' என்பவர், இலங்கைக்கு வந்து ஓர் இளவரசனை மணம் முடித்து, இலங்கையில் குடியேறினார்.

இச்செய்தி, குருநாகல் மாவட்டத்தில் உள்ள ஒரு தமிழ்க் கல்வெட்டு மூலம் தெரியவந்துள்ளது. இவ்விடத்தில் இருந்த 'விக்கிரம சலாமேக ஈஸ்வரம்' என்ற சிவன் கோவிலுக்குச் சுத்தமல்லியாழ்வார் சில கொடைகளை வழங்கியிருந்தார். அவர் கல்வெட்டில் இவை பதிவு செய்யப்பட்டுள்ளன. கல்வெட்டில் இவர் பின்வருமாறுஅறிமுகமாகிறார்: 'பாண்டியனார் வீரப்பெருமாள் நம்பிராட்டியார் கொலோத்துங்க சோழதேவர் திருமகளார் சுத்தமல்லியாழ்வார்'.

'வீரப்பெருமாள்' என்ற இளவரசன், 'வீரபாகு' என்றும் 'மானாபரண தேவர்' என்றும் வேறு ஆவணங்களில் பெயர்பெறுவார். இவர் விஜயபாகுவின் சகோதரியின் மகன். தந்தை ஒரு பாண்டிய இளவரசன். இதனால் இவர் 'பாண்டியனார்'என்று அழைக்கப்பட்டுள்ளார்.

இவற்றால் நாம் அறிவது: விஜயபாகுவின் தங்கை ஒரு பாண்டிய இளவரசனை மணம் செய்தார். விஜயபாகுவின் மருமகன், சோழப் பேரரசனின் மகளை மணம் செய்தார். குலோத்துங்க சோழனின் இன்னொரு மகள் அம்மங்கையாழ்வார். அவரும் தமிழ்நாட்டில் இருக்காது கர்நாடகத்துக்குச்சென்றார்.

## வன்னி சிற்றரசுகள்

மூவேந்த வேளான் போன்று வன்னி பிரதேசத்தில், தங்கள் படைகளுடன் சென்று குடியேறியவர்கள், காலப்போக்கில் குறுநிலத் தலைவர்களாக மாறி, பின்னர் நாம் அறியும் வன்னி அரசுகளின் எழுச்சிக்கு வழிவகுத்தனர் என்று கொள்ள இடமுண்டு.

## வரலாறு கற்பிக்கும் பாடங்கள்

மூவேந்த வேளானும் சுத்தமல்லியாழ்வாரும் போன்ற பல பிரமுகர்கள், காலத்துக்குக் காலம் தமிழ்நாட்டில் இருந்து வந்து, இலங்கையில் குடியேறினர். அவர்களின் பிற்சந்ததியார் நாட்டைவிட்டு வேறெங்கும் செல்லவில்லை.

சுத்தமல்லியாழ்வாரின் வழித்தோன்றல்கள் உண்மையில் ராஜராஜசோழனின் வழித்தோன்றல்களே! ஏனெனில், குலோத்துங்க சோழனின் தந்தை ராஜராஜசோழனின் பேரன், தாயார் ராஜராஜசோழனின் பேர்த்தி!

இலங்கையில், இவ்வழித்தோன்றல்கள் இன்று எங்கே? நான் வேறு, நீ வேறு என்ற கோஷம் ஒலிக்கும் இன்றைய அடிபிடி அரசியலில், இவர்கள் எந்தப் பக்கம்? இதுதான் வரலாறு. வரலாற்றை வரலாறாகக் கற்பவர்களுக்கு இது நன்கு தெரிந்த விசயமே!



# விலங்குகளைக் குறிவைக்காமல் பலபக்க பாதுகாப்புக்கு திட்டமிடவும்

இயற்கையை சீரழித்து, அவ்விடங்களை ஆக்கிரமித்தன் பின்னர், ஏதாவது இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டுவிட்டால் இயற்கையின் மீதே குற்றஞ்சாட்டி, நிவாரணங்களுக்காக கையேந்தும் மனிதர்கள் இருக்கும் வரையிலும், இயற்கையை முழுமையாகப் பாதுகாப்பது கடினமானது.

மலைகளைக் குடைந்தும், கடல், ஆறு என்பவற்றின் கரையோரங்களை ஆக்கிரமித்தும் மழை வெள்ளம் வடிந்தோடும் வடிகான்களை மூடி கட்டடங்களைக் கட்டியும் மக்கள் வாழ்கின்றனர். ஆக்கிரமித்து வாழ்வதில் மனிதர்களுக்கு அலாதிப்பிரியம் போல் தெரிகிறது.

உயிரினங்களைப் பொறுத்தவரையில் அனைத்தும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. அதிலோர் உயிரினம் கூடுதலாக அழிந்துவிட்டால், ஏனைய சில உயிரினங்களில் சமநிலை குலைந்துவிடும். உயிரினங்களின் சமநிலையிலும் மனிதர்களின் செயற்பாடுகளே கூடுதலான தாக்கத்தை செலுத்துகின்றன.

பல உயிரினங்கள் காடுகளை உருவாக்குகின்றன. பழங்களை உண்ணும் விலங்கினங்கள் எச்சம் போடுவதன் ஊடாக, கன்றுகள் முளைக்கின்றன. எனினும், மனிதர்கள் ஆகக்கூடிய சிரத்தையைக் காடழிப்பில் காண்பிப்பதால், விலங்கினங்கள் பாதிக்கப்படுகின்றன.

விவசாயிகளின் பயிர்களுக்கு கடும் சேதம் விளைவிக்கும் செங்குரங்கு, மயில், குரங்கு, மரஅணில், முள்ளம்பன்றி, காட்டுப்பன்றி ஆகிய ஆறு விலங்குகளையும் கொல்வதற்கு அனுமதியளிக்க வேண்டும் என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்திருந்தார்.

அவரது இந்த யோசனைக்கு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளார். விலங்குகளைக் கொல்லாது, விவசாய நிலங்களை பாதுகாத்து, விவசாயிகளுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென யோசனையை முன்வைத்துள்ளார்.

கொல்லும் அதிகாரம் வழங்கப்படுமாயின், வேட்டையாடுபவர்களுக்கு அது சாதகமாகிவிடும். அத்துடன், ஒட்டுமொத்த உயிர்ச் சங்கிலியும் பாதிக்கப்படும். எதிரி உயிரினங்களின் பெருக்கம் அதிகரித்து, சிக்கலான பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

சிறுத்தையை கொன்று இறைச்சியாக்கி உண்பவர்களும் உள்ளனர். அதேபோல, சிற்சில இடங்களில் குரங்குகளும் இறைச்சியாக்கப்படுகின்றன. பலரும் அதனை இறைச்சியோடு இறைச்சியாக கலப்படமாக்கி விற்றுவிடுகின்றனர். இவ்வாறான நிலையில், உயிரினங்கள் அழிக்கப்படுமாயின், சுற்றுச்சூழலுக்கு கடுமையான பாதிப்புகள் கட்டாயம் ஏற்படும்.

விவசாயத்துக்கு கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் விலங்கினங்களில் பல, விவசாய நிலங்களில் இருக்கும் பூச்சிகளைக் கொன்று, மண்ணை கிளறிவிட்டு விவசாயிகளுக்கு ஓரளரவுக்கேனும் உதவி செய்கின்றன. ஆகையால், பாதிப்புகளை ஏற்படுத்தும் விலங்கினங்களை விரட்டும் வகையில், மிகையொலி எழும்பும் முயற்சியை மேற்கொள்ளலாம்.

பட்டாசு கொளுத்தும் சத்தத்துக்கு ஆரம்பத்தில் அச்சம் கொள்ளும் விலங்கினங்கள், அச்சத்தத்துக்கு பழக்கிக்கொண்டால், இலகுவில் விரட்ட ஏலாது. ஆகையால், குறிப்பிட்ட காலத்துக்குக் காலம், மிகயொலியை மாற்றவேண்டும்.

விவசாயத்தை நாசப்படுத்தும் விலங்குகளை மட்டும் குறிவைக்காது, பலபக்க பாதுகாப்பு முறைமை தொடர்பிலும் பாதுகாத்தல் குறித்தும் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

எவ்வளவு கோடி பணம் இருந்தாலும், அவை பலருக்கும் நல்வழியில் உதவும் போதுதான், அது தூய, மேன்மைமிகு பணியாகின்றது. உதவாத எந்தப் பொருளும் செல்வமும் எதற்கும் பொருந்தாது. தங்கள் வசதிக்கு ஏற்ப, பிறருக்கு வழங்குவதே பெரும் திருப்தியாகின்றது.

ஒருவருக்கு இறைவன் செல்வத்தைக் கொடுப்பது, அதைப் பயனுள்ளவாறு செலவு செய்வான் எனத் தகுதிகண்டதன் பின்னரேயாகும். கொடை வழங்குபவருக்கு இறைவன் மேலான வசதிகளை நல்குகின்றான்.

எல்லோரும் வசதிபடைத்தவர்கள் அல்ல; எனவே, செல்வம் இல்லாத ஏழைகளுக்குப் பகிர்வதுதான் கொடை. தங்களை அரவணைக்கவும் சிறுஉதவிகளை வழங்கவும் ஒருவருமே இல்லை என ஏழைகள், மனம் குமையாத நிலை உருவாக்கப்பட வேண்டும்.

வாழ்வது ஒரே தடவைதான். கிடைத்த வாழ்வை பயன் நிறைந்ததாகக் கருதவேண்டும். யாவரையும் திருப்திப்படுத்தி, ஆறுதல் கொடுப்பதே பெரியவரம்.

உயிரோடு கூடிய தேகம் படைக்கப்பட்டுள்ளது. எனவே, எல்லோருமே ஒன்று எனும் மனப்பான்மையை உருவாக்குவதே இறைவனுக்குப் பிடித்தமானதாகும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

தீர்வு முதல் தேர்தல் தொட்டு பிரபாகரன் வரை

# காலத்தை வீணடித்தல்

**மொஹமட் பாதுஷா**

இலங்கையில் பொருளாதார பஞ்சம், அரசியல் பஞ்சம், ஜனநாயக பஞ்சம், மனித உரிமைகள் பஞ்சம், இனநல்லிணக்கப் பஞ்சம், நீதி நிலைநாட்டல் பஞ்சம் போன்ற பஞ்ச நிலைமைகள் நிலவிய போதிலும் கூட, நாட்டு மக்களை ஏதேனும் ஒரு விடயத்தின்பால் 'பராக்குக்காட்டி', காலத்தை வீணடிக்கின்ற போக்குகளுக்கு, ஒருபோதும் பஞ்சம் இருந்ததில்லை.

பொய்க் கற்பிதங்களும் கதை விடுதல்களும் மக்களை முட்டாளாக்கும் பாங்கிலான நகர்வுகளும், நமது அரசியல், ஆளுகை ஒழுங்கை ஆட்கொண்டுள்ளன.

இவற்றைவிடுத்து, நாட்டை முன்னேற்றுவதற்கானதும், மக்களது பிரச்சினைகளை குறைப்பதற்கானதும், இதயசுத்தியுடனான உருப்படியான வேலைத்திட்டங்கள் இல்லை.

மாறிமாறி அதிகாரத்துக்கு வரும் ஆட்சியாளர்கள், பெருந்தேசியக் கட்சிகள், சிறுபான்மை தமிழ், முஸ்லிம் கட்சிகள், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள், இந்தியா, சீனா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள், இலங்கை மீது செல்வாக்குச் செலுத்தும் வேறுபல தரப்புகளுக்கும் இதில் பங்கு இருக்கின்றது.

மிகவுயர்ந்த எழுத்தறிவு மட்டத்தைக் கொண்ட இலங்கை மக்கள் இதனை அறியாதவர்களாக இருக்க முடியாது. ஆயினும், அப்படியான தரப்பினருக்கு பாடம் புகட்ட அவர்கள் முனையாத காரணத்தால், இந்தப் போக்கில் இதுவரை எந்த மாற்றமும் ஏற்படவில்லை. ஆகவே, இலங்கை மக்களின் பிரச்சினைகள் 'பிச்சைக்காரனின் புண்'ணைப் போல ஆகியிருக்கின்றது.

இலங்கையில் இடம்பெற்ற, இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற சிறியதும் பெரியதுமான நிகழ்வுகளை தொடர்ச்சியாகவும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தியும் நோக்குகின்ற போது, அந்த நிகழ்வுகளுக்குள் இருக்கும் சூட்சுமங்களை விளங்கிக் கொள்ள முடியும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கிய பயணத்தில், புதுப்பொலிவுடன் இடம்பெற்ற பேச்சுகள், அதிகாரப் பகிர்வு பற்றிய கருத்துகள், 13ஆவது திருத்த அமலாக்கம், காணி, பொலிஸ் அதிகாரங்கள் பற்றிய அறிக்கைகள், உள்ளூராட்சி சபை தேர்தல் முன்னெடுப்புகள் முதற்கொண்டு, பொருட்களின் விலை அதிகரிப்பு, மின்வெட்டு அமலாக்கம் உட்பட, புலிகளின் தலைவர் உயிருடன் உள்ளாரா, இல்லையா என்ற வாதப்பிரதிவாதத்தையும் கூட, சூட்சுமங்கள் நிறைந்தவையாகவே நோக்க முடியும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற ஒரு நாட்பட்ட விவகாரத்துக்கு, கடந்த சுதந்திர தினத்துக்குள் தீர்வைத் தருவதாக ஜனாதிபதி ரணில் அறிவித்தார். இரண்டரை மாதங்களுக்குள் இது நடைமுறைச் சாத்தியமானதல்ல என்ற யதார்த்தம், எல்லோருக்கும் தெரியும். என்றாலும், ஓரிரு பேச்சுகள் இடம்பெற்றன. பிறகு ஒரு முட்டுச்சந்தில் அது சென்று நின்றுவிட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில், 13ஆவது திருத்த அமலாக்கம் பற்றிய தனது அபிப்பிராயத்தை ஜனாதிபதி முன்வைத்தார். அப்போதெல்லாம் அதற்கு பெரிய எதிர்ப்புகள் கிளம்பவில்லை. மாறாக, ராஜபக்‌ஷ தரப்பும் கொள்கை ரீதியாக பச்சைக் கொடி காட்டியிருந்தது.

ஆனால், ஒரு கட்டத்தில் பௌத்த தேரர்கள் வீதிக்கு இறங்கியதுடன், ஒரு பிரளயமே வெடித்து விடும் நிலை ஏற்பட்டது. அது, "காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது" என ஜனாதிபதி பகிரங்கமாக அறிவித்த தருணமாகும்.

இலங்கையில், 13ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட மாகாண சபை முறைமையை சரிவர அமலாக்குகின்ற விடயத்தில், இந்தியா தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வருகின்றது. இந்தியாவுக்கு இதில் ஓர் அரசியல் இருக்கின்றது.

அந்தவகையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் கொழும்பு வந்து திரும்பிய மறுநாள், அரச தலைவர் மேற்படி அறிவிப்பை விடுத்தார் என்பது கவனிப்புக்கு உரியது.

"13ஆவது திருத்தத்தை அமல்படுத்தப் போகின்றேன். காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கப் போகின்றேன்" என்று அரச தலைவர் அறிவிப்பது, இலங்கை சூழலில் எத்தகைய எதிர்வினையை கொண்டு வரும் என்பது நம்மை விட, ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் நன்றாகத் தெரியும். அதையும் மீறி அவர் இவ்வறிவித்தலை செய்தமை, ஒரு வகையான இராஜதந்திரமாகவோ, சூட்சுமமாகவோ இருந்திருக்கின்றது.

ஆனால், சொல்லி வைத்தாற்போல் எல்லாம் நடந்தது. நாட்டில் சிறுபான்மை மக்களுக்குச் சார்பான குறிப்பாக, தமிழ் மக்களுக்கு சாதகமான அறிவிப்புகள் வெளியானபோது, என்ன விதமான பிரதிபலிப்பை பெருந்தேசிய சக்திகள் வெளிப்படுத்தினவோ, அவ்வாறான எதிர்ப்பு இந்த விடயத்திலும் வெளிக்காட்டப்பட்டது.

இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. "நாங்கள் கொடுக்கத்தான் நினைத்தோம். ஆனால், தமிழ்க் கட்சிகள் பிளவுபட்டுள்ளதுடன், 13இற்கு மறுதரப்பில் எதிர்ப்பும் கிளம்பியுள்ளதால் அதனை எம்மால் செய்ய முடியாதுள்ளதே" என்று சொல்வதற்கு அரசாங்கத்துக்கு காரணம் கிடைத்துள்ளது.

இலங்கையில் மின்வெட்டு அரசியலும் இந்த ரகமானதுதான். ஏனெனில் எரிபொருள் பற்றாக்குறை என்ற காரணத்தைக் கூறி ஆரம்பிக்கப்பட்ட மின்வெட்டு, மாணவர்கள் உயர்தரப் பரீட்சை எழுதிய காலத்திலும் அமலில் இருந்தது. எந்தக் கோரிக்கைக்கும் அரசாங்கம் செவி சாய்க்கவில்லை.

ஆனால், இப்போது மின்சாரக் கட்டணத்தை அதிகரித்தவுடன் எல்லாம் வழமைக்கு திரும்பியுள்ளது. அதாவது, மின்வெட்டு இன்றி, 24 மணிநேரமும் மின்சாரத்தை வழங்கும் இயலுமை, மின்சார சபைக்கு எப்படிக் கிடைத்தது?

இதற்கிடையில், உள்ளூராட்சித் தேர்தலை நடத்தப் போவதாக அரசாங்கம் அறிவித்தது. தேர்தலுக்கான திகதியும் தபால்மூல வாக்களிப்புக்கான நாளும் குறிக்கப்பட்டன. ஆனால், இப்போது தேர்தல் உரிய திகதியில் நடைபெறுவதற்கான நிகழ்தகவுகள் வெகுவாகக் குறைந்துவிட்டன.

உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற விருப்பு, மக்களுக்கு இருந்தாலும் இன்றைய காலகட்டத்தில் தேர்தலை எதிர்கொள்வதற்கு மக்கள் மனநிலை ரீதியாகத் தயாரில்லை என்பதே உண்மையாகும்.

இதன் அர்த்தம், தேர்தல் இடம்பெறக் கூடாது என்பதல்ல; மாறாக, அதற்கு இன்றைய சூழலும் மக்களின் மனோநிலையும் ஒத்துழைக்க மாட்டாது என்பதாகும்.

ஆனால், இதையெல்லாம் மீறி, அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தப் போவதாக அறிவித்தது. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் நிறையவே உள்ளார்ந்த சிக்கல்கள் இருக்கின்ற பின்னணியில், மாகாண சபைத் தேர்தலை கடந்து, உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன.

வெளிப்படையாக அரசாங்கம் இவ்விதம் செயற்பாட்டாலும், மறைமுகமாகத் உள்ளூராட்சி தேர்தலைத் தாமதப்படுத்துவதற்கான இரகசிய நகர்வுகளைச் செய்து கொண்டே இருக்கின்றது. இதுவிடயத்தில், அரசாங்கத்தின் இரட்டை வேடத்தை மக்கள் விளங்கிக்கொண்டுள்ளனர். இதற்கு, தேர்தல் வெற்றி பற்றிய பயமும் காரணமாக இருக்கலாம்.

இந்தச் சம்பவங்களை தொகுத்து நோக்கினால், ஏதாவது ஒரு விடயத்தைச் சொல்லி காலமும் நேரமும் இழுத்தடிக்கப்பட்டு, மக்கள் பேய்க்காட்டப்படுவதை புரிந்து கொள்வது அவ்வளவு கடினமன்று!

இனப்பிரச்சினை தீர்வு, குறுகிய காலத்துக்குள் சாத்தியமில்லை என்பதுடன் உடனடியாக காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு சிங்கள தேசியம் விடாது என்பது தெட்டத்தெளிவான ஓர் அடிப்படையாக இருக்க, அவ்விதமான ஒரு கருத்தியல் கட்டமைக்கப்பட்டது. குறிப்பாக, தமிழ் மக்கள் நம்ப வைக்கப்பட்டனர்.

அதுபோல, மின்சார நெருக்கடிக்கு எரிபொருள் பற்றாக்குறை மட்டும்தான் காரணம் என்ற தோரணையில் விடயங்கள் கையாளப்பட்டு, கடைசியாக கட்டணத்தை அதிகரித்து, மக்களுக்கு சுமையை ஏற்றியவுடன், அவர்களின் நெருக்கடி எல்லாம் தீர்ந்து விட்டது எனக் கூறுவது, 'பேய்க்காட்டல்' தவிர வேறொன்றில்லை.

இது இவ்வாறிருக்க, விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என்று, இந்திய அரசியல்வாதியான பழநெடுமாறனும் கவிஞர் காசிஆனந்தனும் கூறிய கருத்துகளையும், இந்த வகைக்குள்ளேயே வகைப்படுத்தி நோக்க வேண்டியுள்ளது.

பிரபாகரன் இறந்து விட்டதாகவும் அதற்கான ஆதாரம் தம்மிடம் இருப்பதாகவும், அரசாங்கம் பல தடவை உறுதிபடக் கூறிவிட்டது. ஆயினும், அவரது உயிர்வாழ்வு பற்றிய வாதப்பிரதிவாதங்கள் உலகெங்கும் எழுந்துள்ளன.

அரசாங்கம் சொல்வது போல், பிரபாகரன் உயிருடன் இருக்க வாய்ப்பே இல்லை என்பது உண்மையாக இருக்குமென்றால், பழநெடுமாறனின் கருத்து உண்மையாக இருக்க முடியாது. இது ஓர் அடிப்படையற்ற, பூச்சாண்டிகாட்டும் கதையென்றால், இதற்குப் பின்னால் பெரிய அரசியலும் நகர்வுகளும் உள்நோக்கங்களும் உள்ளன எனலாம்.

பிரபாகரனின் பெயரைச் சொல்லி அரசியல் ரீதியாகவும் நிதியியல் ரீதியாகவும் கருத்தியல் அடிப்படையிலும் பிழைப்பு நடத்துபவர்களின் கதைவிடலாகவே இதை நோக்க வேண்டியுள்ளது. இதைப் பல தரப்புகளுடன், பல விடயங்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்கலாம்.

இலங்கையில் தமிழர்களுக்கான தீர்வுத் திட்டம் வழங்கும் அரசாங்கத்தின் முயற்சிகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிளவுபட்டு, தமிழர் அரசியல் பலமிழந்து நிற்கின்ற சூழல், இந்தியாவின் அரசியல் வகிபாகம் - நகர்வுகள் ஆகியவை இவற்றுள் முதன்மையானவை.

அத்துடன், சிலரைப் பயங்காட்ட வேண்டும் என்ற எண்ணம். கருத்தியல் ரீதியாகத் தமிழர்களைக் கட்டமைத்து வைக்க வேண்டிய தேவைப்பாடு; புலிகளின் பெயரைச் சொல்லி நடத்தப்படும் அரசியல், நிதிதிரட்டல், புகலிடக் கோரிக்கை தொடர்பான நலன்கள் எனப் பல விவகாரங்களையும் இதனுடன் தொடர்புபடுத்தலாம்.

அதுமட்டுமன்றி, உள்ளூராட்சி தேர்தல், பெருந்தேசிய அரசியல் ஆகியவற்றிலும் ஏதோவொரு வகையில் செல்வாக்குச் செலுத்தும் ஆயுதமாக இப்பிரசாரம் மாறலாம்.

எது எப்படியிருப்பினும், இதுவும் மேலே குறிப்பிட்டவை போன்று, மக்களை நம்பவைத்து, காலத்தை வீணடிக்கும் இன்னுமொரு 'கதைவிடல்' முயற்சி என்றால், இதனால் தமிழ் மக்களுக்குக் கூட, எந்தப் பலனும் கிடைக்கப் போவதில்லை.

நடைமுறைச் சாத்தியமற்ற, மக்களை 'பேய்க்காட்டும்' கதைவிடல்கள், அறிவிப்புக்களால் காலத்தை வீணடிக்கும் போக்கை சம்பந்தப்பட்டோர் மாற்றிக் கொள்ள வேண்டும். அதுவரை, இலங்கையரின் தலைவிதி மாறுவதற்கான வாய்ப்பில்லை.

## கடிதங்கள்

கரைச்சி பிரதேச சபை

### ஆதன வரி அறவீட்டில் முறைகேடு


கிளிநொச்சி, கரைச்சி பிரதேச சபையால் அறவிடப்படுகின்ற ஆதன வரி அறவீட்டில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாகவும் ஒரே காலப்பகுதிக்கு இரண்டு தடவைகள் வரி அறவிட்டுள்ளதாகவும் தெரிவித்து, திருவையாறு கிராமத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட நபரொருவர் எழுத்து மூலம் முறைப்பாடு செய்துள்ளார்.

தன்னிடம் 2021ஆம் ஆண்டுக்கு 29.12.2022 திகதியில் 4,172.90 ரூபாய் அறவிடப்பட்டுள்ளதோடு, மீண்டும் அதே காலப்பகுதிக்குரிய ஆதனவரியாக 4,172.90 ரூபாவை 28.01.2023 அன்றும் கரைச்சி பிரதேச சபையால் அறவிடப்பட்டுள்ளதோடு, அதற்குரிய 15 சதவீத தாமத தண்டப் பணமாக 1,064.08 ரூபாயும் அறவிடப்பட்டுள்ளது என அவர் தனது எழுத்துமூல முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில், பிரதேச சபையின் தவிசாளரை நேரில் சந்தித்து, அவரது கவனத்துக்குக் கொண்டு சென்ற போதும், இவ்விடயத்துக்குத் தீர்வுகாண அவர் முயலவில்லை. இதன் காரணமாக, செயலாளருக்கு எழுத்து மூலம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச சபையால் அதிகரித்த ஆதன வரி அறவிடப்படுகின்றமைக்கு எதிராக, மக்கள் மத்தியில் தொடர்ச்சியாகக் கடும் எதிர்ப்பு நிலவி வருகின்ற நிலையில், இவ்வாறு ஒரே காலப் பகுதிக்கு இரண்டு தடவைகள் அறவிடப்படுகின்ற நடவடிக்கைகளும் மக்கள் மத்தியில் மேலும் அதிருப்பதியை ஏற்படுத்தியுள்ளது.

– மு. தமிழ்ச்செல்வன்



# தமிழுக்கு மீண்டும் வருகிறார் மீரா ஜாஸ்மின்

மலையாளம் மற்றும் தமிழில் அதிக படங்களில் நடித்தவர், மீரா ஜாஸ்மின். தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளிலும் அவர் நடித்துள்ளார். இந்நிலையில், 2014ல் அனில் ஜான் டைடஸ் என்பவரை திருமணம் செய்து, நடிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டு துபாய்க்கு சென்று குடியேறினார். தற்போது சமூக வலைத்தளங்களில் தனது கிளாமர் போட்டோக்களை வெளியிட்டு, புதுப்பட வாய்ப்பு வேட்டை நடத்தி வருகிறார்.

கடந்த ஆண்டு மலையாளத்தில் வெளியான 'மகள்' என்ற படத்தில் டீன்ஏஜ் பெண்ணுக்கு அம்மாவாக நடித்த அவர், 10 வருடங்களுக்குப் பிறகு தெலுங்கில் 'விமானம்' என்ற படத்தின் மூலம் ரீ-என்ட்ரி கொடுக்கிறார். தற்போது அவருக்கு 41 வயது ஆகிறது. இந்நிலையில் தெலுங்கு மற்றும் தமிழில் உருவாகும் 'விமானம்' படத்தில் நடிக்கிறார்.

தமிழில் கடைசி யாக அவர் 'விஞ்ஞானி' என்ற படத்தில் நடித்திருந்தார். இது கடந்த 2014ல் திரைக்கு வந்தது. 9 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் தமிழில் நடிக்கும் மீரா ஜாஸ்மின், இங்குள்ள சில இயக்குனர்களிடம், நடிக்க வாய்ப்பு கேட்டுள்ளார்.



# தீப்ஷிகா வருத்தம்

விஜய் சேதுபதி, சந்தீப் கிஷன், கவுதம் மேனன் ஆகியோர் நடித்து தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னட மொழிகளில் வெளியான மைக்கேல் படத்தில் நடித்துள்ள தீப்ஷிகா அந்த படத்தில் தான் நடித்த பல காட்சிகளை நீக்கி விட்டதாக குற்றம் சாட்டி உள்ளார்.

இதுகுறித்து அவர் கூறும்போது, "மைக்கேல் படத்தில் நான் நடிக்க வேண்டிய கதாபாத்திரத்தை இயக்குனர் விளக்கியதும் பிடித்துப்போய் உடனே நடிக்க சம்மதம் சொன்னேன். எனது கதாபாத்திரத்தை மையப்படுத்தியே மொத்த படமும் நகர்வது போன்று திரைக்கதை அமைத்து இருந்தனர். கதைகேட்கும் போதே எனது கதாபாத்திரத்துக்கு ரசிகர்கள் மத்தியில் வரவேற்பு கிடைக்கும் என்று நம்பினேன்.

விஜய்சேதுபதியுடன் நான் நிறைய காட்சிகளில் நடித்தேன். ஆனால் படத்தின் நீளம் காரணமாக நான் நடித்த பல காட்சிகளை நீக்கி விட்டனர். இது எனக்கு வருத்தத்தை ஏற்படுத்தி உள்ளது.அதையும் மீறி எனது நடிப்புக்கு பாரட்டு கிடைத்தது மகிழ்ச்சியாக உள்ளது. தமிழில் ஒரு படத்தில் நடித்துள்ளேன். அந்த படத்தின் படப்பிடிப்பு முடிந்துள்ளது" என்றார்.




# புது வீட்டில் குடியேறினார் தனுஷ்

தனுஷ் நடித்த 'வாத்தி' படம் கடந்த வெள்ளிக்கிழமை வெளியானது. அடுத்து 'கேப்டன் மில்லர்' படத்தில் நடித்து வருகிறார். இவர் சென்னை போயஸ்கார்டன் பகுதியில் பிரம்மாண்டமான வீடு கட்டியுள்ளார். இதன் கிரகப்பிரவேசம் சமீபத்தில் நடந்தது. இதில் தனது தாய் விஜயலட்சுமி, தந்தை கஸ்தூரி ராஜாவுடன் குடியேறியுள்ளார். இங்கு சிவராத்திரியை முன்னிட்டு சிறப்பு பூஜை செய்யப்பட்டது. இதில் தனுஷின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் கலந்துகொண்டனர்.

## 'புஷ்பா –2' வாய்ப்பு:

# புறக்கணித்தாரா சமந்தா?

புஷ்பா திரைப்படத்தின் இரண்டாம் பாகத்தில் நடிக்கும் வாய்ப்பை சமந்தா புறக்கணித்ததாக தகவல் வெளியாகி உள்ளது.



தெலுங்கில் அல்லு அர்ஜுன் நடிப்பில் சூப்பர் ஹிட்டான திரைப்படம் 'புஷ்பா'. 2011, டிசம்பரில் வெளியான இந்தப் படத்தை சுகுமார் இயக்க, ராஷ்மிகா மந்தனா, பஹத் ஃபாசில், தனஞ்செயா, சுனில், அஜய் கோஷ், ராவ் ரமேஷ், மைம் கோபி உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். இவர்களுடன் ஒற்றைப் பாடலுக்கு தோன்றி நடிகை சமந்தா ஆடியிருந்தார். தேவி ஸ்ரீ பிரசாத் இசையில் படம் பார்த்த ரசிகர்களை ஆட்டுவித்த அந்த ஒரு பாடலில், படத்தின் நாயகி ராஷ்மிகாவை தூக்கிச் சாப்பிட்டார் சமந்தா. இது தவிரவும் படத்தின் எல்லாப் பாடல்களும் ஹிட்டாகி இருந்தபோதும், சமந்தாவின் 'ஊ... சொல்றியா மாமா' பாட்டுக்கு இளவட்டங்கள் உற்சாகமாக 'உம்' கொட்டினார்கள்.

# 'பகாசூரன்' படத்துக்கு காஷ்யப் வாழ்த்து

மோகன். ஜியின் 'பகாசூரன்' படத்திற்கு பாலிவுட் இயக்குநர் அனுராக் காஷ்யப் வாழ்த்து தெரிவித்துள்ளார்.



'பழைய வண்ணாரப்பேட்டை', 'திரௌபதி', 'ருத்ரதாண்டவம்' ஆகிய படங்களை இயக்கிய மோகன் ஜி தற்போது இயக்கியுள்ள படம் 'பகாசூரன்'. இப்படத்தில் இயக்குனர் செல்வராகவன் கதையின் நாயகனாகவும், நட்டி நட்ராஜ், ராதாரவி ஆகியோர் முக்கிய கதாப்பாத்திரங்களிலும் நடித்திருக்கிறார்கள். இந்த படத்திற்கு சாம்.சிஎஸ் இசையமைத்துள்ளார்.

'பகாசூரன்' திரைப்படம் கடந்த பிப்ரவரி 17-ம் தேதி திரையரங்குகளில் வெளியாகி கலவையான விமர்சனங்களை பெற்று வருகிறது. இந்நிலையில் இப்படத்திற்கு பாலிவுட் இயக்குநர் அனுராக் காஷ்யப் தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக இயக்குநர் அனுராக் காஷ்யப் தனது ட்விட்டர் பக்கத்தில், "பகாசூரன் திரைப்படம் தென்னிந்திய அளவில் நல்ல வரவேற்பை பெற்று வருவதை கேட்க முடிகிறது. என்னுடைய நண்பர் நட்டி நட்ராஜ் மற்றும் இயக்குனர் செல்வராகவன் ஆகியோருக்கு வாழ்த்துக்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

சென்னை

# விண்ணில் பாய்ந்தது மாணவர்களின் ரொக்கெட்

இந்தியாவில் அண்மையில் 'டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் செயற்கைக்கோள் ஏவும் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டது.

இத் திட்டத்தின் கீழ் இந்தியா முழுவதும் உள்ள 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பைச் சேர்ந்த 5000 மாணவர்கள் இணைக்கப்பட்டு அவர்களுக்கு செயற்கைக்கோள் தொழில்நுட்பம், அறிவியல் தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

இந்நிலையில் இப் பயிற்சிகளைப் பெற்ற மாணவர்கள் 'பைக்கோ-செயற்கைக்கோள்கள்' என்ற பெயரில் 1 கிலோகிராமிற்கும் குறைவான எடை கொண்ட சுமார் 150 சிறிய ரக செயற்கைக்கோள்களை உருவாக்கியுள்ளனர்.



அந்தவகையில் நேற்றுமுன்தினம் குறித்த 150 செயற்கைக்கோள்களைச் சுமந்து கொண்டு 'ஹைபிரிட்' ரொக்கெட், செங்கல்பட்டு மாவட்டம் பட்டிபுலம் கிராமத்தில் இருந்து காலை 8.10 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜஸ்தான்



# திருமணம் செய்த காதலி

## துண்டு துண்டுகளாக வெட்டிய காதலன்

ராஜஸ்தானின் பலாசார் கிராமத்தைச் சேர்ந்த குட்டி(Guddi). இவர் அப்பகுதியைச் சேர்ந்த அனோப்ராம் என்பவரைக் காதலித்து வந்துள்ளார். இந்நிலையில் அவருக்கு வேறு ஒரு ஆணுடன் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் திருமணம் இடம்பெற்றுள்ளது.

திருமணத்தின் பின்னரும் குட்டி தனது கணவருக்குத் தெரியாமல் காதலருடன் பழகி வந்துள்ளார் எனவும், அடிக்கடி அவரைத் தனிமையில் சந்தித்து தன்னைத் திருமணம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்தி வந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனோப்ராமைக் கைது செய்த பொலிஸார் இது குறித்து மேற்கொண்ட விசாரணையில் "கடந்த 28ஆம் திகதி அன்று குட்டி தன்னை திருமணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தியதாகவும், இதனால் ஆத்திரத்தில் குட்டியைக் கொலை செய்து துண்டு துண்டுகளாக வெட்டி அருகில் உள்ள காட்டுப்பகுதியில் வீசியதாகவும் அனோப்ராம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

ராமநாதபுரம்



# கார்– முச்சக்கர வண்டி விபத்து:

## பச்சிளம்குழந்தை உட்பட 4 பேர் உயிரிழப்பு

ராமநாதபுரம் அருகே கார்- முச்சக்கர வண்டி நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் பிறந்து மூன்று நாட்களே ஆன குழந்தை உட்பட நால்வர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

திண்டுக்கல்லைச் சேர்ந்தவர் சின்னக் கடையான். இவரது மனைவிக்கு கடந்த 17 ஆம் திகதி ஆண் குழந்தையொன்று பிறந்துள்ளது. இந்நிலையில் நேற்றைய தினம் சின்னகடையான் தனது தாய்,மனைவி மற்றும் குழந்தையை வைத்திய சாலையில் இருந்து தனது வீட்டிற்கு முச்சக்கர வண்டியில் அழைத்து வந்துள்ளார்.

இதன்போது ராமநாதபுரம் அருகே வேகமாக வந்த காரொன்று குறித்த முச்சக்கர வண்டி மீது மோதியதில் சம்பவ இடத்திலேயே முச்சக்கர வண்டியில் பயணித்த அனைவரும் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் குறித்த காரைச் செலுத்தியவரைக் கைது செய்துள்ள பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கர்நாடகா

# ஐபோன் மோகம்: டெலிவரி ஊழியரைக் கொலை செய்த இளைஞர்

ஐபோன் மீது கொண்ட மோகத்தால் இளைஞர் ஒருவர் டெலிவரி ஊழியரை தீயிட்டு எரித்த சம்பவம் கர்நாடகாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடகா மாநிலம் ஹாசன் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஹேமந்த் தத். 20 வயதான இவர் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஒன்லைன் மூலமாக 2 ஆம் தர ஐபோன் தொலைபேசியொன்றைக் கொள்வனவு செய்துள்ளார்.

இந்நிலையில், கடந்த 7ஆம் திகதி அன்று இவர் கொள்வனவு செய்த ஐ போனை நாயக் என்பவர் டெலிவரி செய்வதற்காக அவரது வீட்டுக்கு வந்துள்ளார்.

இதன்போது தொலைபேசியைப் பெற்றுக் கொண்ட ஹேமந்த் , பணம் எடுத்து வருகிறேன் எனக் கூறி நாயக்கை தனது வீட்டுக்குள் வந்து இருக்குமாறு அழைத்துள்ளார்.

உள்ளே சென்ற நாயக் பணத்திற்காக காத்திருந்த நிலையில், சமையல் அறைக்குள் சென்ற ஹேமந்த் கத்தியை எடுத்து வந்து நாயக்கைக் குத்தி கொலை செய்துள்ளார்.



திருவொற்றியூர்



## மாணவியின் இறுதி அஞ்சலியில்

# இளைஞனின் உயிரைப் பறித்த சவப்பெட்டி

திருவொற்றியூரைச் சேர்ந்தவர் நந்தினி. இவருடைய மகள் அபிநயா. 16 வயதான இவர் சென்னை ராயபுரத்தில் உள்ள தனியார் பாடசாலையில் கல்வி கற்று வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 14 ஆம் திகதி அபிநயா காதில் அறுவை சிகிச்சையொன்றைச் செய்வதற்காக அப்பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

சிகிச்சையின்போது அவருக்கு திடீரென மூச்சுத்திணறல் ஏற்படவே அவர் எதிர்பாராத விதமாக கடந்த 17ஆம் திகதி உயிரிழந்தார்.

இதனையடுத்து இறுதி அஞ்சலிக்காக, அபியாவின் உடல் நேற்றுமுன்தினம் அவரது வீட்டில், மின்சார குளிர்சாதன சவப்பெட்டியொன்றில் வைக்கப்பட்டிருந்துள்ளது.

அப்போது திடீரென குறித்த சவப்பெட்டியில் மின்சார கசிவு ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் அப் பெட்டியை தொட்டபடி நின்று மாணவியின் உடலை பார்த்து அழுது கொண்டிருந்த 20 பேர் மீது மின்சாரம் பாய்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் மூவருக்கு பலத்த பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் அவர்கள் உடனடியாக அருகில் உள்ள வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த மூவரில் அபிநயாவின் உறவினரான அஜித் என்ற 19 வயதான இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.




இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# லெய்செஸ்டரை வீழ்த்திய மன்செஸ்டர்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற லெய்செஸ்டர் சிற்றி உடனான போட்டியில் 3 - 0 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் வென்றது.

யுனைட்டெட் சார்பாக, மார்க்கஸ் றஷ்ஃபோர்ட் இரண்டு கோல்களையும், ஜடோான் சஞ்சோ ஒரு கோலையும் பெற்றனர்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 54 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஆர்சனல் காணப்படுகின்றது. 52 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்கள் மன்செஸ்டர் சிற்றியும், 49 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் யுனைட்டெட்டும், 42 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரும் காணப்படுகின்றன. 41 புள்ளிகளுடன் ஐந்தாமிடத்தில் நியூகாசில் யுனைட்டெட் காணப்படுகின்றது. இதில், ஆர்சனலும், நியூகாசில் யுனைட்டெட்டும் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளன.



## பாடசாலை மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்

எம்.என்.எம். அப்ராஸ்

அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேச செயலகத்துக்குட்பட்ட மாவடிப்பள்ளி கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் கொவிட் தாக்கத்தாலும், பொருளாதார நெருக்கடியாலும் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவ மாணவிகளை அடையாளம் கண்டு அவர்களை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை யுனிசெப் நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது.

இதன் முதற்கட்டமாக 40,000 ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொதியும், இரண்டாம் கட்டமாக சிறுவர்களுடைய உள நலனை மேம்படுத்துவதற்காக விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான தொடருக்கான

## இந்திய ODI குழாமில் உனத்கட்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான இந்தியக் குழாமில் ஜெய்டேவ் உனத்கட் இடம்பெற்றுள்ளார்.

குழாம்: றோஹித் ஷர்மா (அணித்தலைவர்), ஷுப்மன் கில், விராட் கோலி, ஷ்ரேயாஸ் ஐயர், சூரியகுமார் யாதவ், லோகேஷ் ராகுல், இஷன் கிஷன் (விக்கெட் காப்பாளர்), ஹர்டிக் பாண்டியா (உப அணித்தலைவர்), இரவீந்திர ஜடேஜா, வொஷிங்டன் சுந்தர், அக்ஸர் பட்டேல், குல்டீப் யாதவ், யுஸ்வேந்திர சஹால், ஷர்துல் தாக்கூர், மொஹமட் சிராஜ், மொஹமட் ஷமி, உம்ரான் மலிக், ஜெய்டேவ் உனத்கட் ஆகியோர் அடங்குகின்றனர்.




## மத்திய மாகாண பூப்பந்தாட்டத் தொடர்

எஸ்.கே. குமார்

மத்திய மாகாண பூப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் மத்திய மாணத்துக்கான பூப்பந்தாட்டத் தொடரானது, நுவரெலியா புதிய நகர மண்டப விளையாட்டு உள்ளரங்கில் கடந்த ஒரு வாரமாக நடைபெற்றது.

இதில், மாணவிகளுக்கான “ஏ” பிரிவில் கண்டி ஐ (High) மகளிர் பாடசாலை முதலாமிடத்தையும், இரண்டாமிடத்தை கண்டி டக் லங்கா கழகமும், மூன்றாமிடத்தை கண்டி விகாரமாதேவி மகளிர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

மாணவர்களுக்கான “ஏ” பிரிவில் எட்டோனியன் பூப்பந்தாட்டக் கழகம் முதலாமிடத்தையும், இரண்டாமிடத்தை நுவரெலியா டி.டபிள்யூ பூப்பந்தாட்ட அகடமியும், மூன்றாமிடத்தை கண்டி அணியினரும் பெற்றனர்.

மாணவிகளுக்கான “பீ “ பிரிவில் கண்டி ஐ (High) மகளிர் பாடசாலை முதலாமிடத்தையும், இரண்டாமிடத்தை கண்டி ஐ.சீ.பீ.டி பல்கலைக்கழகமும், மூன்றாமிடத்தை கண்டி சந்தனநந்தா பௌத்த கல்லூரியும் பெற்றனர்.

மாணவர்களுக்கான “பீ” பிரிவில் நுவரெலியா ஈ.வீ விளையாட்டு கழகம் முதலாமிடத்தையும், இரண்டாமிடத்தை கண்டி ஐ.சீ.பீ.டி பல்கலைக்கழகமும், மூன்றாமிடத்தை கண்டி பூப்பந்தாட்ட அகடமியும் பெற்றனர்.

மாணவிகளுக்கான “சீ” பிரிவில் கண்டி மா மாயா மகளிர் கல்லூரி முதலாமிடத்தையும், இரண்டாமிடத்தை கண்டி சுவர்ணமாலி மகளிர் கல்லூரியும், மூன்றாமிடத்தை கண்டி புஸ்பாநந்த மகளிர் கல்லூரியும் பெற்றனர்.

மாணவர்களுக்கான “சீ” பிரிவில் கண்டி சந்தனநந்தா பௌத்த கல்லூரி முதலாமிடத்தையும், இரண்டாமிடத்தை ஹட்டன் பூப்பந்தாட்டக் கழகமும், மூன்றாமிடத்தை கெலிஓயா ஹரிசாமஸ் பூப்பந்தாட்டக் கழகமும் பெற்றனர்.

மாணவிகளுக்கான “டீ” பிரிவில் கண்டி புஸ்பாநந்த மகளிர் கல்லூரி முதலாமிடத்தையும், இரண்டாமிடத்தை கண்டி சென். அந்தனிஸ் மகளிர் பூப்பந்தாட்டக் கழகமும், மூன்றாமிடத்தை கம்பளை பூப்பந்தாட்ட அகடமியும் பெற்றனர்.

மாணவர்களுக்கான “டீ” பிரிவில் கெலிஓயா அசிராஜ் மாணவர் கல்லூரி முதலாமிடத்தையும், நுவரெலியா லைசியம் சர்வதேச பாடசாலை இரண்டாமிடத்தையும் கண்டி சென். அந்தனிஸ் கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

மாணவிகளுக்கான “ஈ” பிரிவில் கண்டி விகாரமாதேவி மகளிர் கல்லூரி முதலாமிடத்தையும், இரண்டாமிடத்தை கண்டி திரித்துவக் கல்லூரியும், மூன்றாமிடத்தை நுவரெலியா லைசியம் சர்வதேச பாடசாலையும் பெற்றுக் கொண்டது.

அமெரிக்கா

# அதிரடி அறிவிப்பை வெளியிட்ட அமெரிக்கா



நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள துருக்கிக்கு மேலும் 100 மில்லியன் டொலர்கள் உதவித் தொகை வழங்கப்படும் என அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

நிலநடுக்கத்தால் பேரிழப்பை சந்தித்துள்ள துருக்கிக்கு கடந்த சில தினங்களுக்கு முன்னர் 85 மில்லியன் டொலர்களை அமெரிக்கா வழங்கியிருந்தது.

இந்நிலையில் அண்மையில் துருக்கியில் பயணம் மேற்கொண்ட பிளிங்கன், ஹெலிகொப்டரில் சென்று நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ”துருக்கிக்கு மேலும் 100 மில்லியன் டொலர்கள் உதவித் தொகை வழங்க முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ”துருக்கியை போல நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட இன்னொரு நாடான சிரியாவுக்கு உதவி செய்வதில் சில தடைகள் இருப்பதாகவும், எனினும் மனிதாபிமான அடிப்படையிலான இந்த விவகாரத்துக்கு அந்த தடைகள் பொருந்தாது” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரேஸில்



## வாலுடன் பிறந்த பெண் குழந்தை

பிரேசிலில் பெண் குழந்தை ஒன்று வாலுடன் பிறந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அக்குழந்தையின் முதுகில் 6 சென்றிமீற்றர் நீளத்துக்கு குறித்த வால் போன்ற உறுப்பு இருந்துள்ளதாகவும், பின்னர் அது அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டும் இதே போன்று ஆண் குழந்தை ஒன்று வாலுடன் பிறந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

துருக்கி



## இடிபாடுகளுக்கு நடுவே பலூன்கள்

துருக்கி- சிரிய எல்லையில் கடந்த 6 ஆம் திகதி சக்திவாய்ந்த நிலநடுக்கமொன்று ஏற்பட்டது.

இதில் இருநாடுகளையும் சேர்ந்த சுமார் 40,000 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்நிலையில் இந்நில நடுக்கத்தால் உயிரிழந்த ஒவ்வொரு குழந்தையின் நினைவாகவும் ஹாடே நகரில் இடிபாடுகளில் தென்படும் கம்பிகளின் மீது தன்னார்வலர்கள் பலூன்களைக் கட்டி வருகின்றனர்.

இதன்போது ”ஒவ்வொரு பலூன்களைக் கட்டும்போதும் இதயம் வலிப்பதாகவும், இது, உயிரிழந்த குழந்தைகளுக்கு நாங்கள் கொடுக்கும் கடைசி பரிசு எனவும்” அவர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

அதே சமயம் இந்நிலநடுக்கத்தில் வீட்டை இழந்து, முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த 5 வயது சிறுமியொருவருக்கு தன்னார்வலர்கள் கேக் வெட்டிப் பிறந்த நாள் கொண்டாடிய சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பின்லாந்து



## எரிபொருள் நிரப்பு நிலையத்தில்ரோபோ

பின்லாந்தில் வாகனங்களில் எரிபொருள் நிரப்பும் பணியைச் செய்வதற்காக

ரோபோ வொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் எரிபொருளை நிரப்ப வாகன ஓட்டிகள் காரில் இருந்து கீழே இறங்கி வர வேண்டிய அவசியம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும்” காரின் பதிவு எண்ணானது ரோபோவினால் உறுதிப் படுத்தப்பட்ட பின்னர் வாகன ஓட்டிகள் எவ்வளவு டொலருக்கு எரிபொருளை நிரப்ப விரும்புகிறார்களோ அதற்கு ஏற்றவாறு எரிவாயு இருக்கும் தாங்கியின் மூடியை திறந்து, ரோபோவே தாமாக எரிபொருளை நிரப்பி விடுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேசில்



## சாவோ பவுலோவில் சோகம்; 36 பேர் உயிரிழப்பு

பிரேசிலின் சா-பாலோ மாநிலத்தில் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் கனமழை காரணமாக அங்கு வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 36 ஆக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் ஏராளமான வீடுகள் மற்றும் வாகனங்கள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து 6 மாதங்களுக்கு அங்கு அவசர நிலை பிரகடன ப்படுத்தப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

## பிரித்தானிய அரச குடும்பத்தில் இப்படி ஒருவரா?



பிரித்தானிய இளவரசர் வில்லியம்-கேட் தம்பதியினர் தங்களது மகளான இளவரசி சார்லோடை (Charlotte) பொதுமக்கள் போல் வேலைக்குச் செல்லும் நபராக இருக்கத் தயார் படுத்துவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் ”தற்போது ஏழு வயதாகும் சார்லோட்டை தனித்துவமாக வளர்க்க தாம் விரும்புவதாகவும், அரச குடும்பத்தில் பணியாற்றும் ஒருவராக அல்லாமல் நிறுவனம் ஒன்றில் தமது கல்விக்கு தகுந்த வேலைக்கு தேடிக்கொள்ளும் ஒருவராக இருக்கவே அவரைத் தயார் படுத்தி வருவதாகவும் கேட்-வில்லியம் தம்பதியினர் தெரிவித்துள்ளனர்.

சார்லோட் வேலைக்கு செல்லும் நபராக மாறுவார் என்றால் அவர் கண்டிப்பாக அரச குடும்பத்தின் தனிப்பட்ட விதிகளை மீற தயாராக வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 21 பெப்ரவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.